(10)

கருணாநிதி அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாதீர்மானம் 28-ல் விவாதம்

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15 ★★

ஈழநாடு

EELANADU

மலர் 11

தபால்பெட்டி எண்: 49 — இதழ்: 16

போன்: 389 — National Tamil Daily — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 15 ஜூலை 8 புதன்கிழமை [26-2-69]



'சர்வாதிகார ஆட்சி அமைக்க முயன்றவர்கள் யார்?

பெயர்களை உடனே வெளியிடவும்'

எதிர்க்கட்சியினர் பிரதமரிடம் கேள்வி

கொழும்பு, புதன்

பிரதமருடன் நண்பர்கள் போல் நடித்து அரசாங்கத்தைக்கைப்பற்றி, இலங்கையில் சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்களின் பெயர்களை உடனடியாக வெளியிடுமாறு எதிர்க்கட்சியினர் பிரதமர் டட்லி சேனநாயகாவைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமதுபெயரைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை அமைப்பதற்காக தம்முடன் நண்பர்கள் போல் நடித்த சிலரைக் கண்டுபிடித்து துரத்தி விட்டதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று முன்தினம் குரியாப்பிட்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசியிருந்தார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் இக் கேள்வியை எழுப்பியுள்ளனர்.

தேசிய ஐக்கியத்தை தாழ்களும் பாதுகாத்து வருவதாகவும் தேசிய ஐக்கியத்தை குலைத்து சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்களைத் தாங்களும் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

அரசியல் சாஸனத்துக்கு முரண்பாடாக சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்கள்மீது தீவிர கண்காணிப்பு செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர்களது பெயர்களை காலம் தாமதியாது உடனடியாக வெளியிடும்படியும் எதிர்க்கட்சியினர் பிரதமமந்திரியிடம் தயவுடன் கேட்டுள்ளனர்.

இன்று யாழ். வரும் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

சுகாதார அமைச்சர் திரு. ஈ.எல். சேனநாயக்கா இன்று காலை உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாண பகுதிக்கு விஜயம் செய்கின்றார்.

இன்று காலை 8 மணிக்கு பலாலி விமானநிலையத்தை வந்தடையும் அமைச்சர் இன்றிரவு 7 மணிக்கு கொழும்பு திரும்புவார்.

இன்று மாலை 3 மணிக்கு சாவகச்சேரி 'டிறிபேக்' கல்லூரியில் வைத்திய சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைப்பதற்காகவே அமைச்சர் இங்கு வருகின்றார்.

(கா. நி.)

'ஐயோ' 'ஐயோ' என்று திருடர்களும் கத்தினர்களாம்

சுழிபுரம், செவ்

சுழிபுரம் பருவீ வீதியிலுள்ள ஒரு வீட்டில் நள்ளிரவு ஒருமணியளவில் காரில்வந்த கள்வர் கோஷ்டி யொன்று தமது கைவரிசையைக் காட்டமுடியாது ஓட்டமெடுத்த சம்பவமொன்று அண்மையில் நடை பெற்றுள்ளது.

இரவு ஒரு மணியளவில் தினுல் 'ஐயோ, ஐயே,என்று சத்தமிட்டார். இக் கூக்குரலைக் கேட்ட கள்ளர்கள் வந்த காரிலே ஏறி, தாமும் 'ஐயோ ஐயோ' என்று கத்திக்கொண்டு ஓடினர்.

'ஐயோ' என்ற முதல் சத்தத்தைக் கேட்ட அயலவர்கள் தொடர்ந்து 'ஐயோ'

'திருமதி அன்னலுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீர்மாவேலை கொல்ல சதி

தகவலில் உண்மையில்லை

பொலிஸ் வட்டாரம் அறிவிப்பு

கொழும்பு, செவ்.

தெரிவிக்கப்பட்டது. கூட

சென்னை, பெப். 25

தமிழ்நாடு அரசை கண்டிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடத்துவதற்கு தமிழ்நாடு சீழ் சட்டசபையில் விவாதிப்பதற்கு சபாநாயகர் புலவர் கோவிந்தன் அனுமதியளித்திருக்கிறார்.

கிழ்வேணிக் கிராமத்தில் அண்மையில் 42 பேர் உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவத்தின்போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட தமிழ்நாடு தவறி விட்டது என்று கூறி அரசின்மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் பிரேரணையை காங்கிரஸ் உறுப்பினர் திரு. பி. ஜெயராஜ் தாக்கல் செய்திருக்கிறார்.

முந்திய மந்திரிசபை செய்த தவறுகளுக்கு புதிய மந்திரிசபையைக் குற்றஞ் சாட்டுவது சரியல்லவென்றும் நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கும் தீர்மானத்தை சபையில் விவாதிக்க அனுமதியளிப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இம்மாதம் 28-ந் திகதி நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

உபசபாநாயகர்

தமிழ்நாடு சீழ் சட்டசபையின் உபசபாநாயகர் தேர்தல் நாளைய தினம் நடைபெறும். திருச்செந்தூர் எம். எல். ஏ.(தி.மு.க.) திரு. எட்மன்ட் பெர்ணண்டோ நேற்று தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

'அரசாங்க சேவை ஆணைக்குழு கலைக்கப்படவேண்டும்'

கவர்னர்ஜெனரலை ஆட்சிமன்றத்தில் தீவுப்பகுதி எம். பி. கோருவார்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

அரசாங்க சேவை ஆணைக்குழு நடுநிலை தவறிவிட்டதென்றும் அந்த ஆணைக் குழுத் தலைவர், அங்கத்தவர்கள் மீது நம்பிக்கையில்லையென்றும் அந்தக் குழுவைக் கலைத்துவிடவேண்டுமென்றும் கவர்னர் ஜெனரலைக்கோரும் பிரேரணையொன்றை ஆட்சிமன்றத்தில் கொண்டு வருவதற்கு ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்,

இப்பிரேரணையை விவாதிப்பதற்கு இன்னும் திகதி குறிப்பிடப்படவில்லை பிரேரணை ஆட்சிமன்ற நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருக்கிறது.

ஆட்சிமன்றத்தின் சரித்திரத்திலேயே கவர்னர் ஜெனரலைக் கோரும் பிரேரணையொன்றுவருவது இதுதான் முதற்தடவையெனக்கருதப்படுகிறது.

இப்பிரேரணையை விரைவில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள திரு. வி. நவரத்தினம் முயற்சிசெய்வதாகவும் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் தேடுவதற்கு முயற்சிசெய்யப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

திரு. நவரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணை விபரம் வருமாறு:

(1) இணைந்த சிறுப்பர் சேவையின் மூன்றும், தரத்தைச் சேர்ந்த அரசாங்க சேவையாளரும், கைத்தொழில் கூட்டுறுழில் அமைச்சில் கடமையாற்றியவரும், திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 1968, நவம்பர் 7ம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சேவையினின்றும் நிறுத்தப்பட்டவருமான திரு. எஸ். பி. சுரேந்திரநாதனையும்,

(II) பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பைச் சேர்ந்த அரசாங்க சேவையாளருமான திரு. கே. பத்மநாதன் அவர்களையும் அரசாங்க சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்ததை அரசாங்க சேவை ஆணைக்குழு தலையிட்டுத் தடுக்கத் தவறியதாலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவில் இப்போது கடமையாற்றுகின்ற தலைவர் மீதும், உறுப்பினர்களின் மீதும் இச்சபை நம்பிக்கை இழந்துள்ளதென்பதை பிரதிநிதிகள்சபை உறுப்பினர்களாகிய நாம் மேன்மை தங்கிய தங்களுக்குத் தெரிவிக்கின்றேம்.

எனவே, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சொல்லப்பட்ட தலைவரும், உறுப்பினர்களும் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களாகிய நாங்கள் தங்களைத் தயவுடன் வேண்டுகின்றோம். என்னும் பணிவான இவ் விண்ணப்பத்தை மேன்மை தங்கிய மகாதேசாதிபதிக்கு இச்சபை சமர்ப்பிக்கவேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழக

புதிய உபவேந்தராக ஈ.ஓ.ஈ.பெரேரா நியமனம்

பம்பலப்பிட்டி, புதன்

61 வயதுடைய திரு. பேராகிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பெரேரா கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழக

சுழிபுரம் பருனே வீதியி லுள்ள ஒரு வீட்டில் நள் ளிரவு ஒருமணியளவில் காரில்வந்த கள்வர் கோஷ்டி யொன்று தமது கைவரிசை யைக் காட்டமுடியாது ஓட் டமெடுத்த சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றுள் ளது.

இரவு ஒரு மணியளவில் கார் நிற்கும் சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்ட ஆசிரியர் மனைவி, ஒனம் தெரியாத நபர்கள் இருவர் வந்ததையும், அவர்கள் வீட்டின் கதவைத் திறக்க முயன்றதைக் கண்டு அச்சத் தத்தமிட்டார். இக் கூக்குர லைக் கேட்ட கள்ளர்கள் வந்த காரிலே ஏறி, தாமும் 'ஐயோ ஐயோ' என்று கத் திக்கொண்டு ஓடினர்.

'ஐயோ' என்ற முதல் சத் தத்தைக் கேட்ட அயலவர் கள் தொடர்ந்து 'ஐயோ' வென்று கத்திக்கொண்டு கார் ஒன்று செல்வதைப் பார்த்து யாருக்காவது ஆ பத்து வீனமாக இருக்குமென எண் ணினராம். பிறகே திடுடர் வந்த சம்பவம் தெரியவந் தது. கள்வரின் நடமாட்டம் இங்கு பலருக்கும்அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

"மத்தியானம் காட்டினை சண்டித்தனம் எப்படி?"

1-ம்எதிரிஇப்படிக்கேட்டாகசாட்சியம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

"நான் தான் வைத்திலிங் கம்: மத்தியானம் காட்டின சண்டித்தனம் எப்படி?" என்று முதலாம்எதிரி சொன் னதும் சில நிமிடத்தால் காயமடைந்த சுப்பிரமணி யம் ஐயோவென்று குளறி னர். அதன்பிறகு "ஏன்வைத் திலிங்கம் இத்தப் பாதகச் செயலி செய்கிறாய் என்று பேரம்பலம் சொன்னது எனக்கு கேட் டது" என்று கரணவாய் வடக்கைச் சேர்ந்த காசி நாதர் மனைவி பாறுவதி தேவி படுத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்ன ராசா முன்னிலையில் சாட் சியமளிக்கையில் மேற்கண்ட வாறு கூறினர்.

இவ்வழக்கில் கரணவாய் வடக்கைச் சேர்ந்த த. வைத்திலிங்கம், த. மாணிக் கம். வை. தவலிங்கம் வை. தருமலிங்கம், வை. தங் கம்மா ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த சு. சுப் பிரமணியம் என்பவருக்கு கடந்த வருடம் வைகாசி மாதம் 16-ந்திகதி கோடாரி யால் வெட்டியும், அடித்தும் படுகாயம் உண்டு வீட்டை விட்டு போனவர் யார் என் கண்ணுக்கு லேயிற் அடிப்பது என்று கேட்க நான் தான் வைத்திலிங்கம் மத்தியானம் காட்டின சண் டித்தனம் எப்படி என்று முதலாம் எதிரி சொன்னர். மல் விசாரணை அடுத்த மாதம் 7-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவில் மாஜி ஸ்ரேட் எதிரியை சுற்றவாளி யாகக் கண்டு விடுதலை செய் தார்.

பண்ணியதாக வல்வெட்டித் துறைப் பொலிசால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாறுவதிதேவி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காயமடைந்த சுப்பிரமணி யத்தை எலக்குத் தெரியும் எதிரிகளையும் தெரியும் சம் பவதினம் காயமடைந்தவ ரின் தாயார் வீட்டில் தான் நான் நின்றேன். அன்று காயமடைத்தவர் தாயார் வீட்டுக்கு வந்தார். பிறகு

வடபகுதி அசைஸ் விசாரணை

1-ம்எதிரிக்கு 2750ரூபா அபராதம், 2-ம், 3-ம் எதிரிகள் விடுதலை

மயிலன் கூடல் கொலைவழக்கு தீர்ப்பு

யாழ்ப்பாணம் புதன்

மைலன் கூடல் கொலை வழக்கில் 1-ம் எதிரிக்கு 2750 ரூபா அபராதமும், 3 மாத சாதாரண சிறைத் தண்டனை யும் விதிக்கப்பட்டது. அப ராதம் கட்டத் தவறினால் மேலும் இரண்டரை வருட சிறைத்தண்டனை என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட் டது. 2-ம், 3-ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

வடபகுதி அசைஸ்கோர்ட் டில் நீதியரசர் ஏ. எல். டி. கிரைஸ்டர் முன்னிலையில் இவ் வழக்கு நேற்றுக்காலை விசாரணை செய்யப்பட்டது, விசாரணை நடுவில், 1 ம் எதிரி கைமோசக் கொலைக் குற் றத்தை ஒத்துக்கொண்டார். யூரி சபையினர் 1.ம் எதிரி கூறியதை ஏற்றுக்கொண்டு 2-ம், 3,ம் எதிரிகள் சுற்ற வாளிகள் என்றும் தெரிவித் தனர். இதனை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில்68-ம்ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி மைலன் உடலில் சூசைப் பிள்ளை ஞானப்பிரகாசத்தை கொலை செய்ததாக சூசைப் பிள்ளை அந்தோனிப்பிள்ளை, ஜேசுதாசன், அந்தோனிப் பிள்ளைஜெயரத்தினம் ஆகி யோர்மீது குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வ கேட் ஆர். ஜே. ராஜரத்தி னம், அட்வகேட் சியாதாச ராசாவின் உதவியுடனும் புறக்டர் ஆர். ஜே. செல்வ ரத்தினத்தின் அனுசரணை யுடனும் ஆஜராஞர்.

அபராதம் செலுத்துவ தற்கு 1-ம் எதிரிக்கு 2 மாத கால அவகாசம் அளிக்கப் பட்டு அபதாரத்தை இரு பகுதியாக கட்டும்படியும், முதலாம் பகுதியை மார்ச் மாதம் 27-ம் தேதி கட்டும் படியும் தெரிவிக்கப்பட்டது.

மயிலிட்டி கொலை வழக்கில் எதிரிக்கு சிறையும் அபராதமும்

யாழ்ப்பாணம் புதன்

மயிலிட்டி கொலை வழக் கில் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டிற்கு 3 வருட கடூழிய சிறைத் தண்டனை யும், இரண்டாவது குற்றச் சாட்டிற்கு 6 மாத சிறைத் தண்டனை அல்லது 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட் டது.

இவ் வழக்கு நேற்று பிற்ப கல் வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ எல். டி. கிரெஸ்டர் முன்னி லையில் விசாரணை செய்யப் பட்டது,

இவ்வழக்கில் 68-ம்ஆண்டு ஜனவரி 23-ம் தேதி மயிலட் டியில் வல்லிபுரம் சந்திர சேகரம் என்பவர் கந்தை யா பெண் அன்னம்மாவை கொலை செய்ததாகவும் அதே இடத்தில் அதேநேரத் தில் எஸ். கந்தையா என்ப வரை கொலை செய்ய முயற் சித்ததாகவும் குற்றம் சாட் டப்பட்டிருந்தது.

எதிரி கொலை குற்றச்சாட் டில் கைமோசக்கொலை முய ற்சி குற்றத்தையும் ஒப்புக் கொண்டதை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கி னர்.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ், சண்முகநாதன் புறக்டர் எஸ். செல்லத்துரை யின் அனுசரணையுடன் ஆஜ ராஞர்: எதிரிக்காக வழக்க நிஞர் வி. பாலசிங்கம் அர சாங்கத்தால் நியமிக்கப்பட் டிருந்தார்.

'திருமதி அண்ணைவுக்கு அலவன்ஸ் இல்லை'

தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, பெப். 25

மறைந்த தமிழக முத லமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையின் மனைவி திருமதி ராணிக்கு மாதா மாதம் அலவன்ஸ் வழங்கப் படவேண்டுமென எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த கோரிக்கை ஏற்பதற்கில்லை யென தமிழக முதலமைச் சர் திரு. மு. கருணாநிதி இன்று ராஜ்யசீழ் சட்ட சபையில் தெரிவித்தார்.

திருமதி அண்ணுதுரைக்கு அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. கருணாநிதி பிரேரணை ஒன் றைக் கொண்டுவந்திருந்தது தெரிந்ததே.

பாஸ்முறை

நல்லூர், செவ்வாய்

பதினைந்தாம் வார்ட்டுக் கான பாஸ்முறை அடுத்த மாதத்திலிருந்து ரத்தாகு மென ஆஸ்பத்திரி வட்டா ரத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின் றன. இதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

'அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்ச்சியை எதிபார்க்கலாம்'

சமபளக் கமிஷன் தலைவர் தகவல்

கொழும்பு. செவ் சகல அரசாங்க ஊழியர்க ளுக்கும் சம்பள உயர்ச்சியை எதிர்பார்க்கலாம் என்று சம் பளக் கமிஷன் தலைவர் திரு. எல். பி. டி. சில்வா இன்றுதம் மைச் சந்தித்த அரசாங்க சேவை தொழிற்சங்க சம் மேளனப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சம்மேளனப் பிரதிநிதிகள் சம்பளக்கமி ஷன் தலைவரை இன்று சந் தித்து தங்கள் சம்பள உயர் ச்சிபற்றிய கோரிக்கைகளைச் சமர்ப்பித்தபோதே இவ் வாறு இவர் தெரிவித் தார். வாழ்க்கைப்படிச் செலவு அதிகரித்திருப்ப தால் 40 ரூபா சம்பள உயர் ச்சி வழங்கவேண்டுமென தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் சம்பளக் கமி ஷனிடம் கோரியுள்ளனர்.

அமெரிக்காமுடிவு

வாஷிங்டன், பெப். 25

1941-ம் ஆண்டில் அமெ ரிக்காவிலுள்ள பேர்ல் துறை முகத்தின்மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்ட ஜப்பானிய வீரரைக் கௌர விக்க அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

தகவலில் உண்மையில்லை

பொலிஸ் வட்டாரம் அறிவிப்பு

கொழும்பு செவ். எதிர்க்கட்சித்தலைவர் திரு மதி ஸ்ரீமாவோ பண்டார நாயகாவை கொல்லச் சதி செய்ததாகக் கொடுக்கப் பட்ட தகவலில் உண்மை யில்லையென்றும், அதுபற்றி தாங்கள் பூரண விசாரணை நடத்திவிட்டதாகவும் பொலிஸ் தலைமைப்பீடம் இன்று அறிவித்தது

இதுபற்றிய தகவலைக் கொடுத்தவரின் மனதில்எழு ந்த சந்தேகமே இவ்வாறான தவறுதலான தகவலைக் கொடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. கூட் டணிக்கட்சித் தலைவர்கள் இதுபற்றிக் கூறுகையில், திருமதி ஸ்ரீமாவோ பண் டாரநாயகாவை கொல்லுவ தற்கு இருதடவைகள் முய ற்சி மேற்கொள்ளப் பட்ட தாகதெரிவித்தனர்.

எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, செவ் வயிலிட்டியைச் சேர்ந்த விசாகப் பெருமாள் இலட்சு மிகாந்தன் என்ற வாலிபர் அராலி வடக்கு அம்மன் கோவிலைச் சேர்ந்த ஆறு முகம் மகள். இராஜேஸ்வரி வயது 16 என்ற இளம் பெண்ணை கடந்த வருடம் புரட்டாதி மாதம் 5-ந்திகதி தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் வீதியில் வைத்து காலால் தட்டிய தாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட் டித் தொடரப்பட்ட வழக்கு படுத்தித்துறை மாஜஸ்தி திரேட் திரு. கே. விக்ன ராசா முன்லியில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

உடுப்பிட்டி எம். பி. செய்த மொழி பெயர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

தேசிய அரசாங்க சுகா தார சேவையாளர் சங்க மருத்துவ மாதர் மகாநாட் டில், நிகழ்த்தப்பட்ட சிங் கள சொற்பொழிவை உ சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் தமிழில் மொழிபெயர்த்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப் பாணத்தில் நடந்த இம்மகா நாட்டில் கொழும்பிலிருந்து வந்த மருத்துவ மாதர் சங் கப் பிரதிநிதி திருமதி கரு ணாவதி சிங்களத்தில் சொற் பொழிவாற்றினர். இதனை மருத்துவ மாது ஒருவர் மொழிபெயர்த்தபோதிலும் சரியாக மொழிபெயர் க்காமல் சிலவசனங்களை மொழிபெயர்க்க முடியாமல் திணறினர்.

இதை அவதானித்துக் கொண்டிருந்த திரு. எம். சிவசிதம்பரம் அவ ற்றைசரியாகதமிழில்மொழி பெயர்த்துக் கூறினர். திரு. சிவசிதம்பரமே மொழி பெயர்க்கவேண்டுமென பலர் விரும்பியபடியால் அவர் அந்த நீண்டசொற் பொழிவில் உள்ள கஷ்ட மான வசனங்களை மிக இல குவாக மொழிபெயர்த்து உதவினர்.

தமிழ் மருத்துவ மாதர்க ளின் பிரச்னைகளையும் அவர் கொழும்பிலிருந்து வந்த பிரதிநிதிக்கு சிங்களத்தில் விளக்கிக் கூறினர்.

பம்பலப்பிட்டி, புதன்

பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா பேராதனைப் பல் கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவிக்கு மூவரது பெயர்கள் பிரேரிக்கப்பட் டிருந்தது. இதில் இவருக்கு அதிக வாக்குகள் கிடைத்த தன் பேரில் இவரை உப வேந்தராக கல்வி அமைச் சர் நியமித்தார்.

61 வயதுடைய திரு. பெரேரா கேம்பிறிஜ் பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் என்பது குறிப் பிடத்தக்கது.

பேராதனை பல்கலைக்கழக த்தில் நடைபெற்ற ராணுவ மாணவர்மோதலைத் தொட ர்ந்து திரு. என். ஜே. பெரேரா உபவேந்தர் பதவியை ராஜினாமாச்செய் திருந்தது தெரிந்ததே.

கண்டி மாநகரசபை அங்கத்தவர் ராஜினமா

கண்டி, புதன்

கண்டி மாநகரசபையின் கூட்டம்நேற்று நடைபெற்ற போது சுயேச்சை அங்கத்தவ ரும் மல்வத்தை வட்டார பிரதிநிதிரிமான திரு. ஹென்றி விஜயவர்த்தனு தமது பதவியைராஜினமாச் செய்துவிட்டுசபையிலிருந்து வெளியேறினர். இவரது ராஜினமா சபையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து இப் போது கண்டி மாநகரசபை யில் கட்சியின் நிலை:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 11, யு. என். பி. 10. சுயே ச்சை 1.

முன்னர் சுதந்திரக் கட் சியை ஆதரித்துவந்த திரு. விஜயவர்த்தனு ராஜினமாச் செய்தபோது தாம் ஒரு போதும் சுதந்திரக் கட்சியில் மீண்டும் சேரப்போவதில்லை யெனவும் தாம் யு. என். பி. க்கு ஆதரவாக உழைக்கப் போவதாகவும் தெரிவித் தார். திரு. விஜயவர்த்த னுவின் ராஜினமா இனி வாபஸ்பெறமுடியாது என்று மேயர் சபையில் தெரிவித் தார்.

எகிப்தில் அவசரகாலநிலை

கெய்ரோ பெப்.25

எகிப்தில்இன்று அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது. நேற்று நடைபெற்ற இஸ்ரேல் அரா பிய மோதலைத் தொடர் ந்தே இவ்விதம் அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது.

(விபரம் 3 ம் பக்கம்)

அக்காவுக்கும் தம்பிக்கும் துப்பாக்கிச்சூடு

உடுப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்கள் ஒரு அக் காவும் தம்பியும் 20 வயது ள்ள இந்த இளம் பெண் ணும் 12வயதான சிறுவ னும் இப்போது ஆபத் தான நிலையில் யாழ்ப்பா ணம் ஆஸ்பத்திரியில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

இந்தபபரிதாப சம்பவம் நேற்றுக் காலை உடுப்பிட் டிப்பகுதியில் நடைபெற் றுள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் அமிர்தவல்லி என்ற இளம் பெண்ணும் அவரது சகோதரனு லோகநாதன் என்பவருமே துப்பாக்கிச் சூட்டுக்கு இல க்கானவர்களாவர்.

சந்தேகநபரை பொலிசார் தேடிவருகின்றனர் மயில்வாகனம் எள்பவரை பொலிசார் விசாரணைக்கு ட்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நிர்வாகிகள்

இமையாணன், செவ்வுடுப்பிட்டி ''பவானி'' மெல்லிசை மன்றத்தின் உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: ஆசிரியர் சி. ஆனந்தராசா, காரியதரிசி: திரு. சோ. சபானந்தன், தனுதிகாரி, திரு. த. சிவசுந்தரம்.

0 0 0

ஊர்காவற்றுறை, திங்கள் புங்குடுதீவு சேர்வை. துரைச்சாமி வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. ஏ. இலகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாது காவலர்கள் திரு. க. மயில்வாகனம், திரு. க. விஸ்வலிங்கம், திரு. மு. மயில்வாகனம், தலைவர்: திரு ஏ. இலகுப்பிள்ளை. உப தலைவர்கள். திரு. சோ. இராமலிங்கம், திரு. க. திடு நாவுக்கரசு, காரியதரிசி: திரு. எஸ். சிவசுப்பிரமணியம், தனுதிகாரி: திரு. ஏ. பசுபதி. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், சனி இருபாலை சைவபரிபாலன சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, எம்.பி., திரு. தி. பரமானந்தராஜா, திரு. கா. குகமூர்த்தி, கி. சிவசுப்பிரமணிய தேசிகர். திரு. நா. சின்னத்துரை, திரு. க. கந்தையா. தலைவர்: திரு. க. மார்க்கண்டு, உப தலைவர்: திரு. சீ. தம்பிராசா, செயலாளர்: திரு. சி. சிவானந்தன், உபசெயலாளர்: திரு. இ. தயானந்தன், பொருளாளர்: திரு. திரு. பொன்னம்பலநாதன், உபபொருளாளர்: திரு. பொ. சண்முகராஜா, கணக்குப்பரிசோதகர் திரு. சு. சு. சுவாமிநாதன். 10 பேர் கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டது.

0 0 0

அளவெட்டி, திங்கள் வீமன்காமம் ஆங்கிலபாட சாலை மாணவர் மன்ற பொதுக் கூட்டம். பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு. இ. நமசிவாயம் தலைமையில்நடைபெற்ற போது மாணவர் மன்ற தலைவியாக செல்வி. இ. பத்மலோஜினியும், காரியதரிசியாக அ. தவச்செல்வமும் தனுதிகாரியாக அ. தனஞ்சியனும் விஞ்ஞானக்கழக தலைவராக செல்வன் எஸ். சிவசுப்பிரமணியமும் காரியதரிசியாக ஞ. குகநாதனும் சைவ இளைஞர் சங்கத் தலைவராக ஞா. கலாதேவியும் காரியதரிசியாக பரமேஸ்வரியும் கலைக்கழக தலைவியாக பொ. சற்குணமும் காரியதரிசியாக பொ. சிவபாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். மாணவ மன்ற கணக்குபரிசோதகராக ஆசிரியர் ஆ. மார்க்கண்டு தெரிவு செய்யப்பட்டார்.

0 0 0

பயிற்றப்பட்ட பட்டதாரிகள் சங்கத்தின் புதிய தலைவராக திரு. கே. சேகரமும் செயலாளராக திரு. கே. சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்து பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது,

யாழ்ப்பாணக்கல்லூரி - வித்தியாலங்கார

பட்டதாரிமாணவர்கள் மோதினர் ஆட்டம் சமமாக முடிந்தது

யாழ்ப்பாணம், புதன் வட்டுக்கோட்டை பட்டதாரிகள் மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொழும்பு வித்தியாலங்கார பல்கலைக் கழக கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், வட்டுக்கோட்டை கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி சமமாக முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை பட்டதாரிகள் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். ரட்ணகுமார், எம். பாக்கியநாதன், யே. ஆர். செல்லத்துரை முறையே 25, 18, 16 ஓட்டங்களைப் பெற்றனர். செல்டன் 5 விக்கெட்டுகளையும், சேனநாயக்கா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வித்தியாலங்காரக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 138 ஓட்டங்களைப் பெற்றது. அல்விஸ் 47 ஓட்டங்களையும், சேனநாயக்கா 20 ஓட்டங்களையும் பெற்றனர். எஸ். சிவசோதி 36 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

வட்டுக்கோட்டை கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 107 ஓட்டங்களைப் பெற்றது. ஹரிதாசன் 27 ஓட்டங்களைப் பெற்றார். சத்தியவோடி 4 விக்கெட்டுகளையும், செல்டன் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை யும் வீழ்த்தினர்.

வித்தியாலங்காரக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 104 ஓட்டங்களைப் பெற்றது. என். டி. அல்விஸ் 50 ஓட்டங்களைப் பெற்றார். சிவசோதி, ஹரிதாசன் முறையே 6, 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டமுடிவில் இரு கோஷ்டிகளும் சமமான ஓட்டங்களைப் (242-242) பெற்றமையால், ஆட்டம் சமமாக முடிவுற்றது. (தே. நி)

கண்டி கோஷ்டியை

யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸால் வென்றது

யாழ்ப்பாணம், புதன் கண்டி சென். சில்வெஸ்டர் கல்லூரிக்கும், யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு மிடையில், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரி மிக இலகுவாக வெற்றி பெற்றது. மத்திய கல்லூரியின் வீரர் தில்லையம்பலம் இப்போட்டியில் மிகவும் சிறந்து விளங்கினர். இவரின் அபார பந்து வீச்சும், வேகமான துடுப்படியும், மத்திய கல்லூரியின் வெற்றிக்கு ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டிக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 142 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். ரிமான 32 ஓட்டங்களையும், யே. ஏ. டென்லோ 17 ஓட்டங்களையும் பெற்றனர். தில்லையம்பலம் 27 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும், காப்டன் புரட்சிதாசன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மத்திய கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 271 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலேந்திரா 62 ஓட்டங்களையும், புரட்சிதாசன் 52 ஓட்டங்களையும்பெற்று ஆட்டமிழந்தனர். தில்லையம்பலம் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றார். எம். ராஜசிங்கம் எட்டாவது வீரராக துடுப்பெடுத்தாட தொடங்கி ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை மிகவேகமாகப் பெற்றார். இவரின் துடுப்பு ரசிகர்களுக்கு ஒரு வாண வேடிக்கையாக அமைந்தது. ஜெயசிங்கா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கண்டி சென். சில்வெஸ்டர் கல்லூரி தனது 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 56 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஜெயரட்ணகுமார் திறமையா பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், தில்லையம்பலம் மிக சாதுரியமாக 3 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

மத்திய கல்லூரி கண்டிக் கோஷ்டியை, இன்னிங்ஸாலும் 73 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. (தே. நி)

வட்டுக்கோட்டை செய்திகள்

— நமது அராலி நிருபர்

கொள்வனவில் புதியமாற்றம்

வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாச விற்பனைக்கு வேண்டிய பொருட்கள் இப்போது பொறுப்புள்ள சமாச ஊழியர்களாலேயே கொள்வனவு செய்யப்பட்டுவருகிறது. இப்பொருட்கள் செய்யும் நிறுவனபொறியியலாளர் ஒருவர் இயந்திரசாதனங்களை இலங்கைக்கு கொள்வனவுசெய்துவிட்டு அவற்றை முறைப்படி பயிற்சியளிக்க இங்குவருவாரென சமாச நிர்வாகிகள் எதிர்பார்த்திருந்தனர். கொழும்பில் இப்பொறியியலாளருடன் பிரதிநிதியைப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'மாலுமீன்' விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், புதன் காரைநகர் 'மாலுமீன்' விளையாட்டுக் கழகம் அங்குராார்ப்பணம்செய்துவைக்கப்பட்டு, பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்: திருமதி காரின் பக்கே, திருமதி ஸ்குறுன் ராஜேந்திரம், திரு. என். கதிர்காமநாதன், திரு. கே. சுப்பிரமணியம். தலைவர்: எம். சூசைநாதன், உப-தலைவர்: அ. யேம்ஸ், காரியதரிசி: எம். ரி. ராஜேந்திரம், உப-காரியதரிசி: பி. மகேந்திரன், தனுதிகாரி: சு. பூபாலபிள்ளை, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு வாளர்கள் க சிவநேசன், கா. குலசேகரநாதன், மு. நடேசன், சு. தில்லையம்பலம். தே நி)

நினைவுவிழா பேச்சு, கட்டுரைப் போட்டி

சைவசித்தாந்த மகாசபம் திரு. நா. கதிரவேற்பிள்ளையின் நினைவுவிழாவையொட்டி வடமராட்சி எல்லைக்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கிடையே தமிழ் வளர்ச்சிப் போட்டியொன்றை நடத்துவதற்கான ஒழுங்குகளை புலோலி கதிரவேற்பிள்ளை கலாமன்றத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

நாவலர், கந்தமுருகேசன், அண்ணல் கதிரவேற்பிள்ளை ஆகியோரின் நினைவுப்பரிசுகள் வழங்கப்படவிருக்கும் கட்டுரை, பேச்சு, கவிதை, விஞ்ஞானக்கட்டுரை ஆகிய போட்டிகள் இவ் விழாவையொட்டி நடைபெறவிருப்பதாக மன்றச் செயலாளர் திரு. ஆ. தேவராசன் அறிவித்துள்ளார். (கா. நி.)

திறப்புவிழா

சிறுப்பிட்டி, செவ். சிறுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் புதிய கட்டிடத்தை யாழ். மாவட்ட அரசாங்க உதவிஅதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை அடுத்தமாதம் 1-ந் திகதி திறந்துவைக்கவிருக்கிறார். கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பிக்கும் இவ் விழாவில் பல பிரமுகர்கள் கலந்துரையாற்றுவர்கள்,

சினிமா விமர்சனம்
காட்டுராணி

காட்டு ராணி . . . முகத்தை காட்டு ராணி . . . !

பசுமையான செடி கொடிகளும், குளிர்ச்சியான நீர்ச்சுனைகளும், பற்றைப்புதர்களும் நிறைத்த அந்தக் காட்டுப் பிராந்தியத்தில் புள்ளிமான் குட்டியாக கவர்ச்சி உடையில் துள்ளித் திரியும் கே. ஆர். விஜயாவைப் பார்த்து இப்படிப் பாடுகிறார் 'கவ்போய்' உடையில் வரும் அசோகன்.

காதல் வளர்கிறது. சம்பிரதாயம் அதற்குத்தடையாக இருக்கிறது. அவள் அண்ணன் சம்பிரதாயத்தைக் காப்பாற்றத் துடிக்கிறான். கவர்ந்து சென்று கடிமணம் புரிய ஏற்பாடு செய்கிறான் அந்தக் காளை. அந்தோ ..... அவள் நிலை பரிதாபத்துக் குள்ளாகின்றது. காதலித்தது ஒருவனை கைப்பிடிக்க நேர்ந்ததோ இன்னொருவனை இடையில் சுயநலம் கொண்ட சூட்சிக்காரனின் சதிவேறு.....! ஆருத்துயரத்துக்குள்ளாகிறாள் அந்த அபலை.

காதலியை இழந்தவன் கண்ணியமிக்க கனவானாக மாறுகிறான். இரு சிறு உள்ளங்களை சேர்த்து வைக்க சிறுத்தைப் புலியையும், சீறிவரும் சிங்கத்தையும் தன்னந்தனியனாக நின்று சாடி வெற்றி வாகை சூடுகிறான் .....

அவள் வாழ்க்கைமலர்ந்ததா?..... வெறும் மொட்டாகவே கருகிப் போயிற்று.....?

மனோகர், அசோகன், பாலாஜி, ராமதாஸ், கே. ஆர். விஜயா முதலியோருடன் தேவரின் யானை, புலி, சிங்கம், கரடி எல்லாமிருகங்களும்சிறப்பாகநடித்துள்ளன. 'சண்டைப் பிரியர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் இப்படம் நல்லதமிழ் 'கவ்போய்' சித்திரம். மானிப்பாய் வெஸ்லி சினிமாவில் இப் பொழுது 'காட்டு ராணி' காட்சியளித்துக் கொண்டிருக்கிறாள்.

--பேனை--

அதிருபதி

கோப்பாய், செவ் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தமிழில் வாக்கு மூலம் பதியப்படுவதில்லையாம். இது குறித்து இப் பகுதி தமிழரசுவாலிப முன்னணி அதிருப்தி தெரிவித்துள்ளது.

இன்றைய பலன்

புதன்கிழமை
(26-2-69)
மாசி மாதம், 15 உ

திதி- தசமி பின் இரவு 5-22 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- மிருகசீரிடம் பகல் 12-58 மேல் திருவாதிரை.

ராகுகாலம் 12-30 2-00.

சுபநேரம்- 5-00 - 6-30.

இன்று பிறந்தவர்களுக்கு- மந்தநிலையே காணப்படுகின்றது. சிலர் வாத ரோகத்தினால் துன்பப்படலாம். உணவு விஷயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும். குடும்பத்தில் சில பூசல்கள் தலைதூக்கினாலும் மனவடக்கம் அவசியம் வேண்டும். உணர்ச்சிவசப்படுவதால் பின் வருந்த நேரிடும்.

மேஷம்- இதயத்தில் தென்றல் இல்லச்சிறப்பு. ரிஷிபம்- புதிய தலையிடி சிக்கலைத் தவிர்.

மிதுனம்- நடுநிலைக் கொள்கை நல்ல முடிவு.

கடகம்- சுற்றம் சூழும் சுபநாள்.

சிம்மம்- வார்த்தை சாலம் ஏவீசுரப்பார்வை.

கன்னி- தாய்வழி நலன் தனமும் உண்டு.

துலாம்- பனிமலர்ப் பார்வை பரிவின் உதயம்.

விருச்சிகம்- பக்கத்திலே படுகுழி உஷாரா கஇடு.

தனுசு- இன்பத்துடிப்பு இதயத்தால் இணையும்.

மகரம்- குரங்கு மனம் குறுக்குவழி தவிர்.

கும்பம்- தாராள சிந்தை தந்தை வழி ஆதரவு.

மீனம்- இனியவை நடக்கும் இனசன மகிழ்ச்சி.

— சோதிடக்கலாநிதி திருமலை வேலுப்பிள்ளை

44வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

வரிவிளம்பரம்

தேவை

யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கப்படவிருக்கும் புதிய தியேட்டருக்கு எல்லா பதவிகளுக்கும் ஆட்கள் தேவை. தெரிந்தெடுப்பவர் பதவிக்கேற்ப பிணைப்பணம் கட்டவேண்டும். 3-3-69க்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 699, C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 699

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 45 சப்பல் வீதி வீடுகள் விற்பனைக்கு உண்டு. தயவு செய்து போல். உடையார் வளவு பண்டத்தரிப்பு என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 700

காணி:

நெடுங்குளம் ரோட்டுக் கடுகாமையிலுள்ள 31-ம் இலக்க 5 பரப்புக்காணி (வீடுகட்டக் கூடியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. செல்லத்துரை, 31, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம். 533

கல்வி

மெக்கானிக் பாடங்கள்: மார்ச் மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கும் மோட்டார், டிராக்டர், டீசல் வாகன முழு நேர டிப்ளோமா பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். லண்டன் A. M. I. A. M. E. பரீட்சைக்கும் மாணவர்கள் தயார் செய்யப்படுவார்கள். அதிபர் பிறின்ஸ் அகடமி, பொலிஸ் ஸ்ரேசன் வீயு, சாவகச்சேரி. 705

நன்றி நவிலல்

சிவபதமடைந்த எமது அருமைத் தந்தையார் திரு. எஸ். கே. வைத்திலிங்கம் அவர்களின் ஈமைக்கிரியை வைபவத்தின்போது நேரில் சமூகந் தந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் துயரில் பங்கு கொண்ட அன்பர்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இப்படிக்கு K. V. சற்குணம், K.V. சிவநேசன். கொக்குவில்

யம் தலைமையிலநடைபெற்ற போது மாணவர் மன்ற தலைவியாக செல்வி. இ. பத்மலோஜினியும், காரியதரிசியாக அ. தவச்செல்வமும் தனுதிகாரியாக அ. தனஞ்சியனும் விஞ்ஞானக்கழக

ராக திரு. கே. சேகரமும் செயலாளராக திரு. கே. சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்து போர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப் பட்டது,

குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?
இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்

குதிரை மார்க் • HORSE BRAND •

தயாரிப்பாளர்கள்:-
தலைமைக் காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ்
கொழும்பு.
தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ்
மாவிட்டபுரம்.
வடமாகாண விநியோகஸ்தர்கள்:-
தனலக்குமி ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை.
ஏனைய பகுதிகளின் ஏகவிநியோகஸ்தர்:
இன்டநேஷனல் டிஸ்ரிபியூற்றேர்ஸ்
15 1/1, பெயிலி வீதி, கொழும்பு-1.

வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாச விற்பனைக்கு வேண்டிய பொருட்கள் இப்போது பொறுப்புள்ள சமாச ஊழியர்களாலேயே கொள்வனவு செய்யப்பட்டுவருகிறது. இப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு முன், இப்பொருட்களை உற்பத்தி செய்பவர்களிடமிருந்தோ அல்லது இறக்கு மதியாளர்களிடமிருந்தோ பொருட்களின் அன்றைய சந்தை விலை, ரொக்கவிலை கோரப்படாமல் பொருட்களுக்கு அதிகவிலை கொடுக்கப்பட்டதாக அச்சமாச கண்காணிப்புக் குழுவிற்கு கிடைத்த ஒரு முறைப்பாடு பற்றி ஆராய்வதற்கு கண்காணிப்புக்குழுவின் கூட்டமொன்றை வெகுவிரைவில் கூட்டப்போவதாக அக்குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

தீ பிடித்தது

அராலி தெற்கு குடியிருப்புப்பகுதியில் வசிக்கும் திரு. மு. சின்னத்தம்பி என்பவரின் வைக்கோல் போர் கடந்த இரவு 2-00 மணியளவில் தீ பற்றிக்கொண்டது. வீட்டிலுள்ளவர்கள் அவலக்குரல் எழுப்பியதனால் அயலில் வசிப்போர் தீயை அணைத்தனர்.

மின்தறி நெசவுசாலை

வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு வேண்டிய மின்தறிப் பொருட்கள் யாவும் ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. கட்டடமும் தயாராகியுள்ளது. ஆனால் தறிப்பொருட்களை கோவைசெய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கோவை செய்வதற்கு பற்சிபெற்ற பொறியியலாளர்கள் சமாஜத்தில் இல்லை. மின்தறிப்பொறிகளை விற்பனை செய்த ஜப்பானிய இயந்திரப்பொறி உற்பத்தி

சிகிரியாவில் சாரணர்

கேகாலை, செவ்வ. கேகாலை சாந்தமரியாள் தமிழ் மகாவித்தியாலயச் சாரணர் வெளிவாசம் சென்ற 19ந் திகதி நடைபெற்றது இதில் 19 சாரண மாணவர்களும், பிரதம சாரணர் திரு. எம். கிறிஸ்தோபரும், உதவிச் சாரணர் திரு. செ. தில்லைநாதனும் ஒலந்துகொண்டனர்.

சிகிரியாவைச் சென்றடைந்த இக்குழு, சிகிரியா உச்சியில் 'செயபோ' சமிக்ஞைப் பரீட்சையை நடாத்தியது. புதிய சாரணச் சிறுவர் மூவருக்குச் சின்னம் சூட்டு வைபவமும் நடைபெற்றது.

நெற்செய்கைக்கு கடனுதவி

சென்ற காலபோக வேளாண்மைச் செய்கைக்காக விவசாயிகள்பலர் தங்கள் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வங்கிக்கடன் 9 வீதம் வட்டிக்கு எடுத்து கிருஷிகப் பகுதியாரின் ஆலோசனைப்படி விதைநெல், உரம் பணத்திற்குப்பெற்றுவேளாண்மை செய்திருந்தார்கள். நீண்ட வரட்சிகாரணமாக நெல் விளையவில்லை. இதனால் அவர்கள் நஷ்டத்திற்குள்ளானதுமன்றி, கடனைக் குறித்த தவணையில் கட்ட முடியாது தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களையும் கடன் பணத்திற்காக ஒப்படைக்கவேண்டியுள்ளார்கள். இதனால், விவசாயிகளிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் தற்போது கடனைக் கட்டுவதற்கு இன்னும் 210 நாட்கள் கால நீடிப்புக் கோரி சங்கங்களுக்கு மனுச் செய்துள்ளார்கள்.

கலை வளர்ச்சியில் அரசாங்கம்

அல்லைப்பிட்டி, செவ். நம்மிடையே எத்தனையோ விதமான கலைஞர்கள் இலை மறை காய்போல் புகழடையாது இருக்கின்றார்கள் 'அப்படிப்பட்ட கலைஞர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் கலைக்கழகங்கள் ஈடுபடவேண்டும்' என்று வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற கலைக்கழகத்தின் மூன்றாவது ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டுபேசிய பண்டிதர் க. இராசையா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'கலை மனித சமுதாயத்திற்கு புதிய உணர்வையும் உற்சாகத்தையும் தரவல்லது. நாடகங்கள் மூலம் கலையைப் பேணிக்காக்க ஒவ்வொரு கலைஞனும் முன்வரவேண்டும். அவர்களுக்கு வழிகாட்டுவதில் கல்லூரிகள் முன்வரவேண்டும். இன்றைய அரசாங்கம் பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் ஊட்டிவருகிறது. இதனால் கலைஞர்கள் மனதில் மகிழ்ச்சியும் ஊக்கமும் பிறக்கின்றன என்றுகுறிப்பிட்டார்.

அடுத்தமாதம் 1-ந் திகதி திறந்துவைக்கவிருக்கும் இங்குவடுவாரென சமாச நிர்வாகிகள் எதிர்பார்த்திருந்தனர்

கொழும்பில் ஜப்பானிய அரசாங்கப் பிரதிநிதியைக் கண்டித்து ஒரு பொறியியலாளரை ஜப்பானிலிருந்து வரவழைத்துத் தருமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

திருமலை
செய்திகள்
— நமது நிருபர் —

"காந்தி வழி நடப்போம்"

"வன்முறையால் தான் உலகை ஆக்கிரமிக்கலாம் என்ற எண்ணத்தை மாற்றி அன்பு, அஹிம்சையால் உலகை ஆளும் வழியைக் காட்டினார் காந்தி அடிகள். அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும்" என்று கந்தளாயில் புதிதாக அமைக்கப்பட்ட காந்தி இளைஞர் மன்றத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் முதூர் எம். பி. ஜனப் ஏ. எல். எம். மஜித் கூறினார்

0 0 0

தனிச் சிங்களத்துக்கு கண்டனம்

இலங்கைப் போக்குவரத்து சபையின் திருக்கோணேஸ்வர டிப்போவுக்குச் சொந்தமான பஸ்கள் அனைத்தும் டிப்போவின் பெயர் 'திம' என்று தனிச் சிங்களத்தில் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் பிரதேசத்திலேயே தமிழ் புறக்கணிக்கப்படுவது தமிழ் மக்களுக்கு வேதனையை ஊட்டும் செயல் என்று சுட்டிக்காட்டும் திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம் இச்செயலைப் பெரிதும் கண்டித்துள்ளது.

0 0 0

மலையினடியில் மனித சடலம்

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு அடுகாமையில் உள்ள 'இராவணன் வெட்டு' மலைப்பிளவின் அடிச்சுவரடியில் இனம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர் வெள்ளைநிற வேட்டியும், ஷேர்ட்டும் அணிந்திருந்தார். அடையாளம் தெரியாத இந்த நபரின் உடல் மலையின் அடியில் கிடப்பதாக மோட்டார் லோஞ்சில் சென்ற மீனவர்கள் சிலர் பொலிஸ் நிலையத்துக்குக் கொடுத்திருந்த தகவலைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தமிழில் வாக்குமூலம் பதியப்படுவதில்லையாம். இது குறித்து இப்பகுதி தமிழரசுவாலிப முன்னணி அதிருப்தி தெரிவித்துள்ளது.

கேள்வி விளம்பரம்

5000 கலன் தண்ணீர் கொள்ளக் கூடிய தாங்கி மின்தறி நெசவாலை வளவிற்குள் நிறுவுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் 4-3-69-ந் திகதி பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு தலைவர் வலி. மேற்கு ப. நோ. கூ சமாஜம், சங்காணை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

1198

Last day
REGAL at Jaffna
4 Shows
10-00 a. m, 4-45, 7-00, & 9-45 p. m.
Franco Nero - Elisa Montes
in
TEXAS ADDIOS

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
இன்சரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
அசோகன் - K. R. விஜயா
நடித்த
காட்டுராணி

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya Poya 10-30 a. m.
Long Jeffries - Joose Greci
in
ASSIGNMENT LOST FORMULA


ராணி
(யாழ்ப்பாணம்)
இன்சரி 3 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி
நடித்த
அன்னையின் ஆணை

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
இன்சரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

44வது நிஜம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த கோயில்

கிங்ஸ்லி



பிளாஸா
வெம்பிளி
(கண்டி)
ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
மீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜம்

44வது நிஜம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

நினைவு தினம்

இன்று செல்வி மீனும் பிகை மயில்வாகனம் நினைவு தினம். இவர் 19-7-54-ம் திகதி பிறந்தார். வேம்படி மகளிர்கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். 1967-ம் ஆண்டு மாசி மாதம் 26-ந் திகதி எல்லோரையும் மீளாத்துயர் கடலில் ஆழ்த்திவிட்டு, சிவபதமடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். பெற்றோர், "லக்சுமிவாசம்", சங்கத்தானை, சாவகச்சேரி.

703

அரபுக் குடியரசில் நெருக்கடி நிலைமை

சிரியா எல்லைக்குள் இஸ்ரேல் ஊடுருவல்

4 விமானங்கள் வீழ்த்தப்பட்டன

கெய்ரோ, பெப், 25

ஐக்கிய அரபுக் குடியரசில் நெருக்கடி நிலைமை பிரகடனப படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் படைகளுக்கும் அரபுப் படைகளுக்குமிடையில சுவேஸ் காலவாய் ஓரத்தில நேற்றுஏற்பட்ட மோதலையடுத்து இந்த நடவடிக்கையை நாஸர் அரசாங்கம எடுத்துள்ளது.

நேற்று சிரியாவுக்கும் இஸ்ரேலிய படைகளுக்கு மிடையில் பெரிய அளவில் மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது சிரியா எல்லைக்குள் புகுந்த இஸ்ரேலிய படை விமானங்களில் நான்கை சிரியா வீரர்கள் சுட்டுவீழ்த்தியதாக அறிவிக்கப்பட்டது. இந்த மோதலில் 5 குழந்தைகள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டார்களாம். டமாஸ்கஸில் எல்லா போக்கு வரத்து வழிகளும் மூடப்பட்டுள்ளன. அம்மானிலும் விமான நிலையம் நேற்று பலமணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்தது.

எந்த நிமிடத்திலும் இஸ்ரேல் பெரிய அளவில் தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்கக் கூடும் என்று அரபுநாடுகள் எதிர்பார்த்து தயாராய் இருப்பதாகத் தெரிகின்றது.

அரபுக்கமாண்டோக்களின் நிலைகள் மீது மட்டுமே தமது படைகள் தாக்குதல் நடத்தியதாகவும் எவரும் காயமடையவில்லையென்றும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

சிவசேனை ,குண்டர்கள்' மன மாற்றம்?

பம்பாய், பெப். 25

பம்பாயில் கலவரங்களை யேற்படுத்திய சிவசேனையே இப்பொழுது நிவாரண வேலைகளையும் ஆரம்பித்துள்ளது 4 நாள் கலவரத்தைத் தொடர்ந்து கிர்காம், தாதர் பகுதிகளில் காயமடைந்த வர்களுக்குச் சிவசேனைத் தொண்டர்கள் 23ம் திகதி யன்று இரத்ததானம் செய்தனர்.

கலவரங்களிலுல் சகல விதத்திலும் பாதிக்கப்பட்ட வர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்கு நகரின் பல வேறு பகுதிகளிலுமுள்ள சிவசேனை அலுவலகங்களுக் குப் பத்திரங்கள் அனுப்பப் பட்டுள்ளதோடு பாதிக்கப் பட்டவர்களுக்குதவ நிராண நிதியும் சேர்க்கச் சிவசேனையினர் முன்வந்துள்ளனர். மார்ச் 7ல் கூடும் காங்கிரஸ் காரியக் குழுவின் முடிவிலேயே சிவசேனையின் வருங்காலச் செயல்முறை தீர்மானிக்கப்படுமென வும் இதனாலேயே இப்பொழுது கிளர்ச்சியைத் தாங்கள் நிறுத்தியுள்ளதாக சிவசேனைத் தலைவர் ஒருவர் கூறியுள்ளார். தற்பொழுது சிவசேனையினர் மேற்கொண்டுள்ள நிவாரணத் திட்டங்கள் சட்டத்துக்குட்பட்டவை எனவும் அவற்றுல் தகராறுகள் ஏற்படுமெனத் தாங்கள் எதிர்பார்க்கவில்லையெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அயூப்பை சந்திக்குமுன் தலைவர்கள் ஆலோசனை

ராவல்பிண்டி, பெப். 25

அதிபர் அயூப்கானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி கிழக்குப் பாகிஸ்தான் அவாமிக்கட்சியின் தலைவர் சேக்முஜிபூரகுமான் இன்றுமுக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துகின்றார்

அயூப்கானுடன் பேச்சுக்களை எங்கே, எந்த அடிப்படையில் நடத்துவது என்பதுபற்றி இவர்கள் ஆலோசனைகள் நடத்துவதாகத் தெரிகின்றது.

சேக்முஜிபூரகுமான்நேற்று டாக்காவிலிருந்து ராவல் பிண்டிக்கு வந்துசேர்ந்தார். ஜனநாயக செயல்கமிட்டி அங்கத்தவர்களுடன் சேர்முஜிபூரகுமான் இன்று தொடர்ந்து ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார்.

மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோ எயார்மார்ஷல் அஸ்ஹர்கான், லெப்டினஸ்ட் ஜெனரல் ஆலிம்கான் முதலியவர்களும் சேக்முஜிபூரகுமானைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள்.

செவ்வாய் கிரகத்துக்கு

அமெரிக்க கிரகம் போகின்றது

வாஷிங்டன் பெப். 25

செவ்வாய் கிரகத்தை நோக்கி அமெரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா-ஓ-சுவரொட்டி

தமிழக அரசு கொள்கை

சென்னை, பெப். 25

''துப்பாக்கிக் குழாய் வழியாகத்தான் அதிகாரம் வரமுடியும்'' என்ற வாசகம் அடங்கிய மா- சே- துங் ஆதரவு சுவரொட்டிகளை ஒட்டினுல் ஒட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இத்தகைய செயலைத் தமிழக அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறதெனவும் தமிழக முதல்வர் திரு. கருணாநிதி மேற்சபையில் இதுபற்றிய கேள்வியை முழந்த பொழுது குறிப்பிட்டார். அங்கத்தவர் ஒருவர் இது பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த முதல்வர் 'மாசேதுங்கின் சிந்தனைகள்' என்ற நூல் தமிழ் நாட்டில் விற்கப்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லையெனவும் சென்னையிலே சில பிரதிகள் விற்கப்பட்டதாகத் தான் அறிந்ததாகவும் அந்த நூலில் கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்தும் கருத்துக்களையன்றி தமிழ் நாட்டுக்கு இடையூறு விளைவிக்கத் தக்கதாக எதுவும் இல்லையெனத் தெரிவித்து அந்நூல் பற்றி நடவடிக்கை எடுக்கு மதிகாரம் மத்திய அரசுக்கே உரியது எனக் கூறினர்.

—

மலேரியாதடுப்பு

உடுப்பிட்டி, செவ்வாய்

மலேரியாத்தடுப்பு இயக்கம் ஊர்காவற்றுறையில் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. தீவின் பலபாகங்களிலும் இவ்வியக்கத்தினர் டி.டி. ரி. மருந்து தெளிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

முதலிடம்

மூதூர், செவ்.

பாடசாலைகளுக் கிடையில் கல்வி அமைச்சு நடாத்திய உப உணவுப் பயிர்ச்செய்கைப் போட்டியில் கிளிவெட்டி அரசாங்க தமிழ் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப்பெற்றது. இப்போட்டியில் இரண்டாமிடத்தைச் சேனையூர் மகாவித்தியாலயம் பெற்றது.

''உற்பத்தியாகும் உருளைக் கிழங்கை

விற்பனை இலாகாவினர் கொள்வனவு செய்யவேண்டும்''

பிரதமருக்கும அரசாங்க அதிபருக்கும் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்குகளைக் கொள்வனவு செய்யுமாறு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை கோரியும் இதுவரை இதற்கான எந்த ஒழுங்கும் செய்யப்படவில்லை. இதனுல் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு உருளைக்கிழங்கை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய ஒரு கஷ்டமான நிர்ப்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட நீண்ட மகஜர் ஒன்று பிரதம மந்திரிக்கும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரை அனுப்பி வைத்த அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் புத்தூர்க் கிளையினர் தமது மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் வழங்கும் விதை கிழங்கை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொடுப் பதால் விற்பனை நேரத்தில் உருளைக்கிழங்கை நல்ல விலைக்கு விற்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனுல் கிழங்கை கொள்வனவு செய்ய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னமும் முன்வராததால் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கே விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றார்கள்.

தக்காளிப் பழத்தைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வரும் யாழ். மாவட்ட விற்பனை இலாகா அதேபோல் உருளைக் கிழங்கையும் கொள்வனவு செய்து விற்பனை செய்தால் விவசாயிகளை இந்தக் கஷ்டத்திலிருந்து நீக்கலாம்.

விதை உருளைக்கிழங்கு செப்பனிடுவதையும், விற்பனை செய்யும் கிழங்கைப் பாதுகாக்கவும் அரசாங்கம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்து யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்க வேண்டுமென வும் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் யாழ்ப்பாணம் விற்பனை இலாகா விவசாயப்பகுதி அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(கா.நி.)

— —

குற்றத்தை ஒப்புக் கொண்டார்

வல்வெட்டித்துறை, செவ்

எஸ். சங்கரலிங்கம் என்பவர் ரூபா 150 பெறுமதியான சைக்கிள் ஒன்றைக் களவாடியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித் துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரியைக் கையடையாளம் கொடுக்கும்படிஉத்தரவிட்டு தீர்ப்பு அளிப்பதை அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

— —

கரைக்கு அருகில் கப்பல்

உடுப்பிட்டி, செவ்.

நற்பொழுது யாழ். துறை முகத்தில் முதல் தடவையாகக் கரைக்கருகில் வெளி நாட்டுச் சரக்குக் கப்பலொன்று நங்கூரமிட்டுள்ளது. இக்கப்பலின் பெயர் ''ஜலப் பலக்கா'' இக்கப்பல் கரையிலிருந்து ஆறு மைல் தூரத்தில் நிற்கின்றது. இதற்கு முன்பு வெளிநாட்டுக்கப்பல்கள் எதுவும் கரைக்கு மிக அருகில் வந்துநின்றதில்லை. இதர கப்பல்கள் கரையிலிருந்து 20 மைல் தூரத்தில் நிற்பதே வழக்கம், இதனுல் துறைமுக வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

துக்கம்

வல்வெட்டித்துறை, செவ்.

நாம் தமிழர் இயக்கம் ஆர். ஜி. யின் கற்பனை'

இ. தி மு. க. பிரமுகர் கருத்து

உடுப்பிட்டி, செவ்வாய்

''நாம் தமிழர் இயக்கம் என்ற ஒன்றினைக் கற்பனை செய்து இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒற்றுமையைச் செய்ய நாம் எந்தத் தருணத்திலும் தயங்க மாட்டோம். தமிழ் மக்கள் ஓர் கோவிலில் அன்னதானம் கொடுத்தாலும், ஓர் மைசெய்தாலும் அதனை தமிழ் மக்களுக்கு செய்ததாகவே நாம் கருதுவோம்'' என்று இலங்கை இ. தி. மு. க. பிரமுகர் திரு. ஆர். ஜி. யின் கற்பனை பற்றி கருத்துத் தெரிவித்தார்.

'செக். சம்பவம் விழிப்பை ஏற்படுத்தியது' பிரிட்டனில் நிக்ஸன்

லண்டன், பெப். 25

பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் இருநாடுகளுக்குமிடையிலிருந்து

விமான நிலையத்தில் அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் வரவேற்றார்.

பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இருந்து வரும் நேச உறவுகளைக் குறிப்பிட்ட திரு. நிக்ஸன் உலக அமைதி ஏற்படுவதற்கு எல்லா நாடுகளும்இம்மாதிரி நேச உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றார்.

செக்கோஸ்லாவாக்கியாவில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு மேற்கத்திய நேச



யில் பல சந்திப்புகளை நடத்தவிருக்கிறார்.

திரு. நிக்ஸன் பிரிட்டனுக்கு வருமுன் பிரஸ்ஸல்ஸ்



வரும் பாரம்பரிய உறவுகள் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

தற்கு எல்லா நாடுகளுடனும் இம்மாதிரி நேச உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றார்.

செக்கோஸ்லாவாக்கியாவில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நேச நாடுகளை விழிப்படையச் செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நேசநாடுகளுக்கிடையில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார்.

திரு. நிக்ஸன் பிரிட்டிஷ் பிரதமருடன் அவர் மாளிகையில் தனிப்பட்ட முறையில் பல சந்திப்புகளை நடத்தவிருக்கிறார்.

திரு. நிக்ஸன் பிரிட்டனுக்கு வருமுன் பிரஸ்ஸல்ஸில் நேட்டோ தலைமைக் காரியாலயத்தில் உரைநிகழ்த்தினார்.

திரு. நிக்ஸன் தங்கியிருக்கும் ஹோட்டலின் முன்னால் சுமார் 200 அமெரிக்க எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசாருக்கும் அவர்களுக்குமிடையில் மோதல்ஏற்பட்டது. பலர் காயமடைந்தார்கள்.

வியட்காங் தாக்குதலை பதிலடி கொடுக்க தென்வியட்னாம் ஆயத்தம்

வாஷிங்டன், பெப். 25

வியட்னாமில் அமெரிக்கா முன்பு குண்டு வீச்சை நிறுத்தியதற்கு காரணமாய் இருந்த சூழ்நிலைகளைப்பற்றியும் அதிகாரப்பற்றற்ற முறையில் ஏற்பட்ட உடன்பாடு குறித்தும் அமெரிக்கா மீண்டும் பரிசீலனைசெய்யவிருக்கின்றது. இந்த உடன்பாட்டை வடவியட்னாம்மீறி வருகின்றதா என்பதை அமெரிக்கா ஆராயவிருக்கின்றது.

வியட்காங்கியர் தென்வியட்னாமில் பொதுமக்கள் வாழும் கிராமங்கள் மீது மூர்க்கத்தனமாக புதிய தாக்குதல்களை நடத்திவருவதே இதற்குக்காரணமாகும்.

இதற்கிடையில் வடவியட்னாம் மீது தனிப்பட்ட முறையில் தென்வியட்னாம் தானே தாக்குதலைநடத்துவதா என்பதுகுறித்து தென்வியட்னாம் உபஅதிபர் கா-ஓ-கி பாரிஸுக்கு அமெரிக்க அதிபர் நிக்ஸன் விஜயம் செய்யும்போது அவருடன் ஆலோசனைகள் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் தென்வியட்னாம் நகரங்கள் மீது வியட்காங்கியர் 138 தடவைகள் ராக்கட்டுகள் மூலமும், துப்பாக்கிகள் மூலமும் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்களாம்.

சாரதியின்றி ரயில்புறப்பட்டது

கிருஷ்ணகார், பெப். 25

மேற்கு வங்கத்தில் கிருஷ்ணகார் ரயில் நிலையத்தில் சனிக்கிழமை காலை கல்கத்தா செல்லும் மின்சார ரயில் சாரதியும், காவலாளியும் மின்றி குறிப்பிட்ட நேரத்துக்கு 20 நிமிடம் முன்னதாகவே புறப்பட்டது. வண்டியில் உள்ள பிரயாணிகள் பயத்தினால் கூக்குரலிட்டனர். நிலையத்தில் நின்ற மக்களும் செய்வதறியாது திகைத்துநின்ற சம்யத்தில் போலா என்ற காபின் ஊழியர் கடைசியிலுள்ள 'கார்டின்' பெட்டிக்குள் சமயோசிதமாக ஏறி பிளாட்பாரத்தின் கோடிவரை சென்று விட்ட புகையிரதத்தை நிறுத்தினர். அதிகாரிகள் இந்த வண்டி எப்படி டிறைவரும் கார்டுமின்றித் தானாகப் புறப்பட்டது என்பது குறித்து விசாரித்து வருகிறார்கள்.

புதுவை தேர்தல்களம்

தி. மு. க.-காங்கிரஸ் பிரசார ஏற்பாடுகள்

புதுவை, பெப். 25

புதுவையில் மார்ச் 9-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. மாநில சட்டசபையின் 30 இடங்களுக்கும் போட்டியிடும் காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்கும் இந்தஇடைத் தேர்தலில் பலத்த போட்டியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது, புதுவைப் பகுதியில் 13 வேட்பாளர்களையும் காரைக்காலில் 6 வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ள தி. மு. க, வலது கம்யூனிஸ்ட் கட்சியுடனும், முஸ்லிம் லீக்குடனும் தேர்தல் உடன்படிக்கை செய்துள்ளது. இத் தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்கள் தெரிவையிட்டு காங்கிரஸ்-தி. மு. க. ஆகியஇரண்டிலும்அதிருப்தி நிலவுகிறது. இத்தகைய அதிருப்தியினாலேயேபுதுவை நகரசபை ன் தி. மு. க. மேயர் குபேர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். காங்கிரஸ் வட்டாரத்தினரும் இனிமேலாவது கட்சிமாறல்கள் நடைபெறுதபடி பார்த்துக் கொள்ள கட்சி விசுவாசம் பற்றி சந்தேகிக்கத்தக்கவர்களுக்கு தேர்தலில் போட்டியிட டிக்கட் வழங்கப்படவில்லையென அறிவித்துள்ளனர். இத்தேர்தலையொட்டி புதுவையிலும் இதர பகுதிகளிலும் இருகாராரும் தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். இப்பிரசாரத்தையொட்டித் தமிழ்நாடு முதலமைச்சரும் பிற அமைச்சர்களும் புதுவைக்கும், காரைக்காலுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்கள். காங்கிரஸ் குழுவும் பிரசாரத்துக்கென ஒரு கோஷ்டியை இப்பகுதிக்கு அனுப்பியுள்ளது. காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம், நாகர்கோவில் அங்கத்தவர் திரு. காமராஜும் வேறு காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொள்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

அமெரிக்க கிரகம் போகின்றது

வாஷிங்டன் பெப். 25

செவ்வாய் கிரகத்தை நோக்கி அமெரிக்கா ஓர் ஆளில்லா கிரகத்தை அனுப்பிவைத்துள்ளது. 22 கோடியே 6 லட்சம் மைல் தொலைவை 5 மாதங்களில் இந்த விண்கலம் சென்றடையும், செவ்வாய்க் கிரகம் பற்றி இதுவரை மனிதன் அறியாத பல தகவல்களை இந்தக் கிரகம் பூமிக்கு அனுப்புமாம். செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வாழ்வது சாத்தியமா என்பதுபற்றியும் இந்தக் கிரகத்தின் மூலம் அறியப்படுமாம் கெனடி முனையிலிருந்து இந்தக் கிரகம் அனுப்பப்பட்டது.

அடுத்த வெள்ளியன்று மூவருடன் கூடிய கிரகம் ஒன்றை அமெரிக்கா சந்திரனை நோக்கி அனுப்பும். இவர்கள் பத்து நாட்கள்வரை வெளியில் பிரயாணம் செய்து சந்திரனைச் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்புவர். சந்திரனில் மனிதனை இறக்குவதற்கான சாத்தியங்களை இந்தப் பிரயாணத்தின் மூலம் ஆராயப்படும்.

ஒரே ஆளின் உறுப்புகள் 6 பேருக்கு அபயம்

நியூயோர்க் பெப். 24

ஒரே நபரிடமிருந்து எடுக்கப்பட்ட உறுப்புகள் அறுவைச் சிகிச்சைமூலம் 4 ஆண்களுக்கும் 2 பெண்களுக்கும் பொருத்தப்பட்டுள்ளன. மெமோரியல் ஆஸ்பத்திரியில் இறந்த 53 வயதுள்ள ஒரு ஆடவரிடமிருந்து எடுக்கப்பட்ட இருதயம், மூத்திரக் கோசங்கள், ஈரல், கண்கள் ஆகியனவே மேற்கூறிய 4 ஆண்களுக்கும் 2 பெண்களுக்கும் பொருத்தப்பட்ட இரவல் உறுப்புகளாகும். அறுவைச் சிகிச்சை பெற்ற இந்த 6 பேரும் குணமடைந்து வருவதாகக்கூறப்படுகிறது. வைத்திய வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியாகிய இந்த அறுவைச் சிகிச்சைகள் ஒரேசமயத்தில் நடைபெற்றிருப்பதும் இதுவே முதல் தடவையாகும். இரு ஆஸ்பத்திரிகள் இரவல் இருதயம் பொருத்துவதில் ஈடுபட்டிருப்பதும் முதல் தடவையாகும்

அதிபரின் வண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்.

நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட காணியில் புதிய விளையாட்டு மைதானம் சிரமதானமுலம் அமைக்க பெற்றோர்களையும் மாணவர்களையும் முன்வருமாறு நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திரு. ஏ. கந்தையா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ந. நி)

பெற்றோர் அச்சம்

பண்டத்தரிப்பு, செவ்

இளவாலை பிரதான வீதியைக் கடந்து இளவாலை ஆண்கள் தமிழ்ப் பாடசாலைக்குச்செல்லும் சிறுவரைப் பற்றி பெற்றோர் அச்சம் கொண்டுள்ளனர். பாடசாலையிருக்கிற தென்பதைக்குறிக்கும்வீதிச்சின்னத்தைக்கூட கவனியாமல் வாகனங்கள் அதிவிரைவாகச் செல்லுவதே காரணம் என அறியப்படுகிறது. இளவாலை கன்னியர் மகாவித்தியாலயச் சிறுவர் சிறுமிகளின் பெற்றோரும் மேற்படி அச்சத்திற்குள்ளாகியிருக்கின்றனர்,

தமிழுலகத்துக்கு வழிகாட்டி

அளவெட்டி, செவ்.

"30 வருடங்களுக்கு முன்பு தமிழகம் இருந்த நிலையிலும் பார்க்க இன்று எவ்வளவோ மாற்றம அடைந்திருக்கிறது. அண்ணு தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்து மூடநம்பிக்கைகளைக் களைந்து எறிந்து தமிழ் சமுதாயத்தை உருவாக்கினார் இவர் தமிழகத்தில் ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்தினர்" என்று சாலைக்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஊறணி, மயிலிட்டி கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

வண. பிதா. பி. எஸ். மரிய தாசன் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டம் ஊறணி, மயிலிட்டி தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் நடைபெற்றது.

பண்டிதர் இராசையா

இ. தி மு. க. பிரமுகர் கருத்து

உடுப்பிட்டி, செவ்வாய்

"நாம் தமிழர் இயக்கம் என்ற ஒன்றினைக் கற்பனை செய்து இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று தம்பதெனியா எம். பி. திரு, ஆர். ஜி. சேனநாயக்கா தேசிய அரசாங்கத்திடம் விடுத்துள்ள கோரிக்கையை அவதானித்தோம். இது ஒரு அப்பட்டமான அரசியல் லாபம் கருதிச் செய்யப்படும் செயலாகும்.

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் இனத்தின் தேசிய இயக்கம். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே எமது இலட்சியம். அதே வேளையில் தமிழ் இனம் நசுக்கப்படுவதையோ, அவதிக்குள்ளாக்கப் படுவதையோ, அழிக்கப்படுவதையோ நாம் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்".

இவ்வாறு இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக நிதிக்குழுச் செயலாளர் திரு. எ. உ. நெடுமாறன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"தமிழுக்கும், தமிழினத்துக்கும் எவ்வித தீங்கும் நேரிடாது பாதுகாப்பதே எமது பணியாகும். இக்கடமையைச் செய்ய நாம் எந்தத் தருணத்திலும் தயங்க மாட்டோம். தமிழ் மக்கள் ஓர் கோவிலில் அன்னதானம் கொடுத்தாலும், ஓர் நாடகம் நடத்தினாலும் அல்லது அவர்களின் தனித்தத்துவத்தைப் பிரதிபலிக்கும் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அவற்றிற்கெல்லாம் "நாம் தமிழர் இயக்கம்" என்றுகற் பனைப் பெயர் சூட்டி விடுவார்கள்."

புங்குடுதீவு கி. ச. கோரிக்கை

அல்லைப்பிட்டி, செவ்.

புங்குடுதீவு மக்கள் உணவுப் பொருட்களைப் பெறுவதில் அடைந்து வரும் கஷ்டத்தைப் போக்க உடனடியாக ஒரு சந்தைக் கட்டிடத்தை அமைத்து தரும்படி புங்குடுதீவுக் கிராம சபை உள்ளூராட்சி அமைச்சரை வேண்டியுள்ளது.

பேசுகையில், "உலகின் அன்னிய நாடுகளில் அடிமையாகவுள்ளதமிழர் தன்மான உணர்வுடன் வாழவழிவகுத்தார் அண்ணு. நீதிக்கட்சியை நல்லவழியில் செலுத்திய சீர்திருத்தவாதியை பிற்போக்குவாதி எனக கூறுவது சரியா? என சிந்திக்க வேண்டும்." என்றுகூறினர்.

திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் பேசுகையில் "கலை ஞர்குலத்தில் பிறந்து அரியாசனத்தில் அமர்ந்த அண்ணு கலைஞர்களுக்கு காட்டியவழி அளப்பரியது." என்று கூறினர்.

துறைமுக வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

துக்கம்

வல்வெட்டித்துறை, செவ்.

படுத்தித்துறை பஸ்டிப் போவைச் சேர்ந்த பஸ். சாரதி கே. தம்பு மரணமானதையிட்டு பஸ் ஊழியர்கள் அக்கம் அனுஷ்டித்து பஸ் நிலையத்தில் வெள்ளைக்கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர்,

'வடக்கில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவுக'

அளவெட்டி, செவ்.

வடபகுதியில் ஒரு புற்று நோய் சிகிச்சை நிலையம் நிறுவித் தரும்படி சென்ற ஞாயிற்றுக்கிழமை அங்கு ராற்பணம் செய்யப்பட்ட யாழ் புற்று நோயாளர் சங்கம் அரசாங்கத் திடம் கோருகிறது.

யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் டாக்டர் கே. கனகரத்தினம் தலைமையில் யாழ் புற்றுநோயாளர்சங்கம் நேற்று முன்தினம்அங்குராற்பணம் செய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் பின்வருமாறு-

புற்றுநோயால் பாதிக்கப்படும் மக்கள் இங்கிருந்து மகரம போன்ற தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்துடன் அங்கு பல கஷ்டங்களுடன் சென்றும் அங்கு உள்ளவர்களுடன் பேசமுடியாமலிருக்கிறது. அங்கு சிங்களம் தெரிந்தவர்கள் மட்டுமே உள்ளார்கள். எனவே கனடா போன்ற நாடுகளின் உதவி கிடைக்கும் போது யாழ் நகரில் உடன் புற்றுநோயாளர் சிகிச்சை நிலையமொன்றை நிறுவ வேண்டுமென அரசாங்கத்தைக் கோருதல்.

பாஷையூரில் அண்ணுபடிப்பகம்

யாழ்ப்பாணம், புதன்

பாஷையூர் கடலோர மைதானத்தில் நிறுவப்பட்டிருக்கும் அண்ணு படிப்பகம் எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு சித்திரை மாதம் திறந்து வைக்கப்பட விருக்கின்றது.

பாஷையூர் சமூகசேவைச் சங்கம், இளைஞர் சங்கம், சனசமூகநிலையம் ஆகியவைகளின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இத்திறப்பு விழாவினை முன்னிட்டு இருதினங்களுக்கு கலைநிகழ்ச்சிகளான நடனம், நாடகம், இசை, கரகம், பொய்க்கால் குதிரையாட்டம், விளையாட்டுப் போட்டிகள் ஆகியனவும் இடம் பெறவிருக்கின்றன.

விழாச் செயலாளர் திரு. ஜே. அன்டர்சன் இதற்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றார். (கா. நி)

"இவர்களை காப்பாற்றுங்கள்"

உடுப்பிட்டி, செவ்.

"எனது வட்டார மக்களை காப்பாற்றுங்கள். அவர்கள் அநியாயமாகக் கடலுக்கு இரையாகப் போகிறார்கள்"

இவ்வாறு அபயக்குரலெழுப்பினர் 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ. ஈஸ்வரலிங்கம் பெருமாள். உடுப்பிட்டிக் கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் அவர் மயிலியதனைக் கடற்கரையில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும். இந்த அபாயத்தைத் தடுக்கப் பலம் வாய்ந்த சுவர் கட்ட வேண்டுமென்றும் தலைவரிடம் கோரினர். இவ்விடயத்தில் உடன் கவனமெடுத்து தனது வட்டார மக்களைக்காப்பற்றுமாறு அவர் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டார்.

அமோக விளைச்சல்

மாத்தறை, செவ்.

இவ்வருடம் மாத்தறை மாவட்டத்தில் பெரும் போக நெற் செய்கை அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளதெனவும் இப் பெரும்போக நெற்செய்கையால் இப்பகுதியில் 1500,000 புசல் நெல்பெறக் கூடுமென்றும் எதிர்பார்ப்பதாக மாத்தறை அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எந்த வயதினராக இருப்பினும், எப்படி வளர்ந்தவர்களாக இருப்பினும் எல்லோருக்கும் அறநெறிப் பயிற்சி வழங்கலாம். - மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வடுஷம் மாசிமாதம் 15-ந் திகதி
(26 - 2 - 69)

இந்தியாசெல்வோருக்கு புனர்வாழ்வு

இலங்கை - இந்திய (சிறிமா-சாஸ்திரி) ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பவிருக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுவதுடன் புனர்வாழ்வளிக்கும் பொறுப்பை மாநில அரசுகளிடம் மட்டும் விட்டு விடாமல் மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருப்பது, திக்குத் தெரியாமல் அங்கு சென்று குடியேறவிருக்கும் இந்திய வம்சாவளி மக்களின் எதிர் காலம் பற்றி ஓரளவு ஆறுதல் கொள்ளக்கூடிய நம்பிக்கையை அளிப்பதாக இருக்கிறது.

ஒப்பந்தத்தின்படி பதினெந்து ஆண்டுகளில் ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவளியினர் இங்கிருந்து சென்று இந்தியாவில் குடியமரவேண்டும். 'நாடற்ற' மக்களாக இருந்து வரும் இவர்களில் ஒரு லட்சத்து மூப்பதாயிரம் குடும்பங்கள் இவ்வருடம் ஜூன் மாதம் தொடக்கம் இந்தியாவில் குடியமரத் தொடங்குவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தப்படி ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியா செல்ல வேண்டுமென்றாலும் நிர்ப்பந்தம் இருக்காது என்று உறுதியளிக்கப்பட்ட போதிலும்மறைமுக நிர்ப்பந்தம் இல்லை யென்று சொல்ல முடியாது. தி.மு.க. நாம் தமிழர் இயக்கம், என்ற பூச்சாண்டிப் பிரசாரம் தேர்தல் காலம் நெருங்க நெருங்க தவேஷப் பிரசாரமாக மாறி, இந்தியா செல்வதா இலங்கையிலிருப்பதா என ஒரு முடிவுக்கும் வரமுடியாதிருப்போரை இந்தியாவுக்குச் சென்று விடுவதே நல்ல தென்ற தீர்மானத்துக்கு வருவதற்கு நிர்ப்பந்திக்குமென்பதில் ஐயமில்லை. வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு எந்நாளும் சந்தேகப் பிரஜைகளாகவேலோராலும் கருதப்படுமளவுக்கு நிலைமையை உருவாக்கியதே அவர்கள் இங்கிருந்து போவதற்காக மறைமுக நிர்ப்பந்தம்தான் இந்தியா செல்லும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கு இந்திய மத்திய அரசுதான் பொறுப்பென்றே, மாநில அரசுகள் தான்பொறுப்பென்றே விட்டு விடுவதுநல்லதல்ல. மக்கள் சம்பந்தப்பட்ட இவ்விஷயத்தை மனிதாபிமானத்துடன் கவனிக்க வேண்டும். பர்மாவிலிருந்து இந்தியா வந்தவர்கள் அகதிகளாக இருப்பது மட்டுமன்றி வாழ முடியாத நிலையில் சிலர் தற்கொலை செய்து கொண்டுமிருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து வரும் இந்திய வம்சாவளியினருக்கென மத்திய அரசு புனர் வாழ்வுத்திட்டம் வகுத்திருக்கிறது. தமிழக அரசுத் திட்டம் வகுத்துள்ளதென தமிழக நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார். இலங்கையிலிருந்து வரும் இந்திய வம்சாவழியினருக்கு அரசாங்கத்துறைகளில் மட்டுமல்லாது தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கான திட்டங்களையும் அதற்கான உதவிகளையும் அரசு வகுத்திருக்கிறதாம். திட்டம் வகுத்தால் மட்டும் போதாது அது சரியான முறையில் செயல்படவும் வேண்டும். உதவியும் ஊக்கமும் சம்பந்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவும் வேண்டும். மத்திய அரசு பொறுப் பேற்று விட்டதால் மாநில அரசுகள் சும்மா இருந்து விட முடியாது. எப்படியும் இங்கிருந்து அவர்கள் போனால் போதும் என்ற மனப்பான்மையில் அவர்கள் விஷயத்தை இலங்கை அரசும் கைகழுவி விடக்கூடாது. இந்நாட்டின் பொருளாதார வளத்துக்கு உழைத்துக் கொடுத்தவர்கள் மன நிறைவுடன் செல்லவும் அங்கு அவர்கள் நிம்மதியாக வாழவும் இலங்கையும் அக்கறை செலுத்த வேண்டும். உழைப்புச் செல்வம் வெளியே போவது இலங்கைக்கு நஷ்டம்; இதைச் சரியாகப் பயன்படுத்துவதில்தான் இந்தியாவின் இலாபம் தங்கியிருக்கிறது.

பௌத்தம் கொலு வீற்றிருக்கும் கண்டியில் சைவக்குரல்!

பௌத்தம் கொலு வீற்றிருக்கும் கண்டி மாநகரிலே சைவக்குரல் எழுப்பினர் பல அன்பர்கள். ஆமாம், சைவமகாசபையில் நடந்தேறிய சைவம் பற்றிய கருத்தரங்கைத்தான் குறிப்பிடுகிறேன்.

பல்கலைக்கழக மாணவர் தறுதலைகளா?

பல்கலைக்கழக மாணவர்கள் தறுதலைகளா? என்ற அதிர்ச்சிக் குண்டைப் போட்டுத் தனது கருத்துக்களை முன்வைத்தார் பல்கலைக்கழக இந்துமாமன்றத் தலைவர். பல்கலைக்கழக மாணவர்களிடையே வாலிபத்தின் படியிலே மிடுக்குடன் நிற்பவர்கள் என்பதையும், எந்த ஒரு விஷயத்தையும் கண்மூடித்தனமாக நம்பாது ஏன் எதற்கு எப்படி என்று ஆராயும் உளப்பாங்கு உடையவர் என்பதையும் உணராதவர்கள் தான் தம்மைப் பற்றித் தப்புக் கணக்குப் போடுகின்றனர் என்றார் அவர். பெரியவர்கள் 'உள்ளத்தால் வழுவாது வாழ்ந்துகாட்டி' னால் இளைஞர் உலகம் ஒரு மாணவர்களிடையே புத்துணர்ச்சி பிறந்துவிட்டதென்றும் அது வற்றாத ஓடையாகப் பிரவாகிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றும் கூறி முடித்தார்.

சைவ மன்றங்களே

இணைக்கும் பெருமன்றம்

போட்டி பொறாமைகளை விடுத்து, மலையகத்தில் உள்ள சைவ நிறுவனங்களை இணைக்கும்ஒரு பெருமன்றம் நிறுவப்படுமானால் அதன் மூலம் பல அரிய நற்சாதனைகளைச் சைவ உலகுக்கு ஆற்ற முடியுமென கலாநிதி சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

சிங்கள நாடகவுலகின் சிறப்பான முன்னேற்றம்

தலைவர். பல்கலைக்கழக மாணவர்கள் வாலிபத்தின் படியிலே மிடுக்குடன் நிற்பவர்கள் என்பதையும், எந்த ஒரு விஷயத்தையும் கண்மூடித்தனமாக நம்பாது ஏன் எதற்கு எப்படி என்று ஆராயும் உளப்பாங்கு உடையவர் என்பதையும் உணராதவர்கள் தான் தம்மைப் பற்றித் தப்புக் கணக்குப் போடுகின்றனர் என்றார் அவர். பெரியவர்கள் 'உள்ளத்தால் வழுவாது வாழ்ந்துகாட்டி' னால் இளைஞர் உலகம் ஒரு

'இந்து போர்ட்டுக்கு' ஒரு சிலை

நாவலருக்கு அடுத்து ஈழத்தில் சைவம் தழைக்க சைவப்பாடசாலைகள் நிறுவியதன் மூலம் அரும்பணி ஆற்றிய பெரியார் இந்து போர்ட் இராசரத்தினம் தான் எனக் குறிப்பிட்ட விரிவுரையாளர் தனஞ்செயராசசிங்கம், இத்தகைய பெரியாருக்கு சிலை நிறுவுவது சைவ உலகின் இன்றியமையாத கடன் என வற்புறுத்தினார். சைவநெறிகளை

மலையகத்தில் — ஏ. ரி

போதும் தவறுன பாதைக்குச் செல்ல முடியாது என்று கூறிய அவர், இத்தகைய பண்புள்ளவர்கள் பல்கலைக் கழகத்தில் அடுகிவடுவதை யிட்டு வருத்தம் தெரிவித்தார். நாவலர் போன்ற பெருந்தகைகள் 'உள்ளத்தால் வழுவாத வாழ்வு' வாழ்ந்ததால்தான் ஈழத்தில் சைவம் தழைத்தது; ஆயிரம் ஆயிரம் மக்கள் சரியான பாதையில் ஆற்றுப்படுத்தப்பட்டனர் எனக் கூறிய அன்பர், இந்நிலையை நிலைநாட்ட ஒரு சில பேராசிரியர்கள் அயராது உழைப்பதாகவும் அதன் விளைவே அங்கே நிர்மாணிக்கப்பட்[illegible]திருப்பதைக்கண்ட நான் என்ற சிங்கள நாடகங்களை நன்கு ரசித்த என் உள்ளம் கண்டியில் நடந்த கென்றி ஜெயசேனவின் 'குவேனி' என்ற நாடகத்தை நாடியது விந்தையான விஷயமல்ல ஆனால் பகலில் நடந்த காட்சிக்குப் பிரவேசச்சீட்டுப் பெறமுடியாமல் இரவுக்காட்சியைப் பார்த்தபொழுது தான் நாடகக்கலையில் சிங்களச் சகோதரருக்குள்ள ஈடுபாடு பேச்சளவில் மட்டும் அமைந்ததல்ல என்பதை உணர்ந்தேன்.

குவேனி கெட்டவள் அல்ல; அவள் புனிதமானவள் என்பதை நிலைநாட்டும் முறையில் கதைக்கரு அமைந்திருந்தது. இதை விட அந்நாடகம் அமைக்கப்பட்டமுறைதான் என்னை பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது. திரை விலகியதும் இரண்டு மொட்டை மரங்களைப் பின்னணியில் காண்கிறோம். ஒருமரத்தின் அடியில் குவேனியின் பிள்ளைகள் அமர்ந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் வருடங்களாக வாழ்வதாகக் கற்பனை பண்ணப்பட்டிருக்கும் அப்பிள்ளைகள் தாயின் வாக்குறுதிப்படி அவள் வருகையை எதிர் பார்த்து இருக்கிறார்கள். அங்கே துவக்குடன் ஒரு தற்கால வேட்டைக்காரன் வருகிறான். மேடையின் முற்பகுதியில்நிற்கும் நடிகர்களுக் கிடையே (குவேனியின் பிள்ளைகள் - வேட்டைக்காரன்) உரையாடல் நடக்கிறது. குவேனி ஓர் அரக்கி என்றும் அவள் சந்ததியினரே வேடரென்றும், விஜயனுல் துரத்த பட்டவள்தான் அவளென்றும் கூறிய வேட்டைக்காரன், குவேனி நல்லவள் என வாதிடும் அவளின் பிள்ளைகளின் கூற்றை வெட்டிப்பேசுகிறான். குவேனியின் பழைய வரலாற்றைக் கூறுகிறான். இடைக்கிடை குவேனியின் வரலாறு கோரஸ் பாடுபவர்களின் நாட்டுப்பாடல்கள் மூலமும் மெல்லிய ஆடல்கள் மூலமும் காட்டப்படுகின்றது. முன் மேடையில்உள்ள நடிகர்கள் மட்டும் இருளில் அமிழ்ந்திய படி நிற்க, பின் மேடையில் ஆடல்பாடல் அற்புதமாய் அமைகிறது. இடைக்கிடை ஆடல்பாடல் அற்றுவிட வேட்டைக்காரன் குவேனி பிள்ளைகள் உரையாடல் தொடர்கிறது. உணர்ச்சி ததும்பும் உரையாடல்களுக்கு சிங்களம் படிக்க ஒளி அமைப்பும் புதிய உத்திகளும் ஆகா! அற்புதம்! அற்புதம்!?

இரண்டாவது காட்சி

இரண்டாவது காட்சியும் அதே பின்னணியில் தான் காட்டப்படுகிறது. பிள்ளைகளைப் பார்க்கும் குதூகல உள்ளம் குவேனியின் நர்த்தனமூலம் காட்டப்படுகிறது வேட்டைக்காரனின் பேச்சை பிள்ளைகள் குவேனிக்குக்கூற, அவள் தான் புனிதமானவள் என்று நிலைநாட்ட பேசும்உரையாடலில் உணர்ச்சி இழையோடுகிறது. பிள்ளைகளின் கேள்வியும் இவளது விடையும் இடைக்கிடை பாடல்களில் அமைகிறது. தன்னைப் பற்றிப் பிழையான கருத்தை உருவாக்கியவர்களை குவேனி சபிப்பதுபோல் கோபக்கனல் வீசிநிற்கும் நிலையும், அவள் சாபத்தை கோரஸ் பாடுபவர்கள் இரத்தநிற பின்திரைமுன் உக்கிர நடனமூலம் காட்டுவதும் அக்காட்சிக்கு முத்தாய்ப்பு வைத்தமாதிரி அமைகிறது. பின் மேடைக் காட்சி மறைய குவேனி பிள்ளைகளை அன்புடன் அணைத்தபடி செல்கிறாள்.

மூன்றாவது காட்சி

மூன்றாவது காட்சி நவீன நீதிமன்றக் காட்சியாய் அமைகிறது. ஒரு சட்டவல்லுனன் குவேனி அரக்கி கெட்டவள் என்று வாதிடுவதையும், இன்னொருவர் குவேனி பற்றி மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட கதை வலுவற்றதென்றும் அவள் உத்தமியென்றும் நிரூபிக்கிறார். இறுதியில் குவேனி தன்னைப்பற்றி உலகம் தப்புக்கணக்கு போடுவதற்குத் தான் பொறுப்பாளியல்ல வென்று கூறுவதுடன் காட்சி முடிகிறது. புதிய உத்திகளில் அமைந்த இந்த நாடகம் நாடகப் போக்கிலேயே ஒரு புரட்சியை உருவாக்கியிருக்கிறது என லார். இப்படியான புதுமைகள் தமிழ் நாடக உலகம் வரவேற்குமா?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 26—2—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 யூனிஸ்கோ உரைச்சித்திரம், 7-45 தொடர்நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்விருப்பம்.

ஜி. ஜி.யைச் சந்தித்தனர்

அளவெட்டி, செவ்வாய் அகில இலங்கை தேசிய தொழிற்சங்க தலைவர் திரு. ஜி. ஜி, பொன்னம்பலத்தை அவருடைய இல்லத்தில் காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி தொழிலாளர் சங்கத்தின் தூதுக்குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது,

இப் பேச்சுவார்த்தையில் சங்கத் தூதுக்குழுவினர், ஊழியர் இளைப்பாறும்போது ஒருவருட சேவைக்கு ஒரு மாத சம்பளத்தை பணிக்கொடையாக வழங்குதல், இடுமாதசம்பளத்தை மிகை ஊதியமாக வழங்குதல் போன்ற நான்கு கோரிக்கைகளை சமர்ப்பித்தனர்.

அவர் உடனே இக்கோரிக்கைகள் சம்பந்தமாக சீமந்து கூட்டுதாபன தலைவர் திரு. விஜயநாயகாவுடன் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடாத்தினர். திரு. ஜி. ஜி. இம்மாதம் 27-ம் திகதி சீமெந்து தொழிற்சாலைக்கு விஜயம் செய்து மேலும்இதுபற்றி பேசவிருக்கிறார்.

'தேசிய அரசாங்கத்தில் ஏன் இந்தப்பாகுபாடு?'

மருத்துவமாதர் சங்கதலைவி கேள்

யாழ்ப்பாணம், புதன்

ஐயாறன் எழுதுகிறார்

ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்களைக் கொலை செய்ய ஏதோ சதி நடந்ததாக வெளியான செய்தியைக் கேட்டதும் அதை நம்பமுடியவில்லை. பாவம்! அவரை ஏன் கொல்ல வேண்டும்? யார் மனதிலே இந்தத் தீய எண்ணம் ஏன் எழ வேண்டுமென்பதே புரியவில்லை. பொலிசார் புலன் விசாரித்து வருகிறார்களாம். சிக்கிரத்தில் உண்மை வெளியாகலாம்.

முன்னர் அவர் பிரதமராக இருக்கையில் கதிர்காமத்துக்குச் செல்லும் போது அவரைக் கொல்ல சதி நடந்ததாகவும், கண்டியில் மகாநாயகதேரோவுக்கு கடைசி அஞ்சலி செலுத்த அவர் செல்ல முடியாது போகவே, இப்புதிய சதியும் கைகூடவில்லை என்று சொல்லப்படுகிறது.

இவற்றில் ஏதும் உண்மையிருப்பின் இரு முறையும் தெய்வாதீனமாகவே அவர் தப்பி இருக்க வேண்டும். அரசியல் வேற்றுமைகள், தவறுகள் என்ன இருப்பினும் உலகிலே முதல் முதலாக நாட்டின் பிரதமரான ஸ்ரீமாவோவைப்பற்றி இலங்கை உண்மையில் பெருமைப்பட வேண்டும்.

இரு பெரிய கண்டங்களில் தப்பிய அவர், இனி பெண்குலத்தின் இன்னல்களைத் தீர்க்க தமது முழுநேரத்தையும் பயன்படுத்த முடியாதா?

பெண்களுக்கு சமமான வாக்குரிமை அளித்திருந்தும் இந்நாட்டில் ஆட்சி மன்றமுள்ளிட்டு, பல விடயங்களிலும் அவர்களுக்குரிய இடம்கிடைக்கவில்லை. உண்மையில் பார்லிமெண்ட் சபை, மாநகரசபை முதலிய பிரதிநிதி ஸ்தாபனங்களிலெல்லாம் பெண்களுக்கு சரிபாதி ஸ்தானங்களாவது கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் இலங்கை அரசியல் பெரிதும் புனிதமடைந்து சமூகக் குறைகள் பலவும் நீங்கக்கூடும்.

தமிழ்ப் பகுதிகளிலே இவ்வகையில் நிலைமை மிக மோசமாகும். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உரைப்புச் செல்வம் வெளியே போவது இலங்கைக்கு நஷ்டம்; இதைச் சரியாகப் பயன்படுத்துவதில்தான் இந்தியாவின் இலாபம் தங்கியிருக்கிறது.

விவேகமான செயல்

பம்பாயில் சிவசேனை இயக்கத்தினரின் வன்முறைச் செயல்கள் பற்றியும் அதனால் பம்பாயில் வாழும் தமிழர்களுக்கும் மற்றும் தென்னாட்டவருக்கும் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பொருட்சேதம் பற்றியும் தமிழக சட்ட மன்றத்தில் அவசரமாக விவாதிக்க வேண்டுமெனக் கோரி சட்டமன்ற உறுப்பினர் சிலர் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு சபாநாயகர் புலவர் கோவிந்தன் மறுத்து விட்டது விவேகமான செயலாகும்.

பம்பாய் சம்பவம் பற்றி சட்ட மன்றம் அவசரமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் மகாராஷ்டிர முதன் மந்திரிக்கும் இந்திய மத்திய உள்துறை அமைச்சருக்கும் தாம் கடிதம் எழுதியிருப்பதாகவும் முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்து ஒத்திவைப்புப் பிரேரணை மறுக்கப்பட்டதை ஆதரித்துப் பேசுவதும் வரவேற்கத் தக்கது.

பம்பாயில் வாழும் தமிழர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்றும் திரு. கருணாநிதி மகாராஷ்டிர முதல் அமைச்சருக்கும் உள்துறை அமைச்சர் திரு. சவானுக்கும் எழுதிய கடிதத்தில் கேட்டிருந்தார். பம்பாயில் 'சிவசேனையுக்க' வன்முறைச் செயல்கள் இப்போது அடங்கியுள்ளன. இச்சமயத்தில் தமிழக சட்ட மன்றத்தில் பம்பாய்ச் சம்பவம் பற்றி விவாதித்தால் பிரதிநிதிகள் தெரிவிக்கும் ஆத்திரமான வார்த்தைகள் பம்பாயில் மீண்டும் பிரச்னையைக் கிளப்பி வன்முறைச் செயல்களுக்கே மீண்டும் வழிவகுக்கும். இந்த விவாதத்துக்கு மறுத்ததன் மூலம் மீண்டும் ஒரு கொந்தளிப்பு ஏற்படாமல் தமிழக சட்ட மன்றம் விவேகத்துடன் நடந்து கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

பம்பாயில் மீண்டும் இது போன்ற சம்பவங்கள் ஏற்படாமலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் மாநில அரசும் மத்திய அரசும் நடவடிக்கைகளெடுப்பது இந்தியாவின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் மிகமிக அவசியம்.

மாணவர் சம்மேளன தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வடபகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணத்தில்கூடி மாணவர் கங்ங சம்மேளனம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்றிய இக் கூட்டத்தில் மாணவர் மத்தியில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம், நாட்டின் கல்வி அமைப்பு முறை, அந்நிய கலாச்சார பண்பாடு ஊடுருவல் சம்பந்தமான கருத்துக்களை வழங்கினர்.

கூட்டத்தில் பேசிய பலரும் இன்று அரசாங்கம் நடாத்திவரும் ''சிலவச'' சுவீப் டிக்கற் விற்பனையைக் கண்டித்துப் பேசியதுடன் மாணவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இயக்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்றும் கூறினார்கள். பிற நாடுகளில் மாணவ சமூகத்தினர் ஆர்பாட்ட முறை மூலம் சாதித்த வெற்றிகளையும் தாமும் கருத்திற் கொண்டு, எதிர்காலப் பொறுப்பை தமது கருத்தில் ஏந்தி செயற்பட வேண்டிய காலமும் நெருங்கி விட்டதென்று தீர்மானிக்கப்பட்டது.

சமீபத்தில் பேராதனை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இராணுவ-மாணவர் மோதல் சம்பந்தமாக பிரதமரும், கல்வி மந்திரி இனிய கொல்லையும் வெளியிட்ட அறிக்கைகள் ஒரு பக்கம் சார்புள்ளதாகயிருப்பதாகவும் தெரிவித்து இதற்கு கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பொ, பாலசுப்பிரமணியம் செயலாளர் செல்லத்துரை, சி. அருளானந்தம் பொருளாளர் அ. கதிர்காமநாதன்.

இருபத்தைந்து பேரைக் கொண்ட செயற் கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது (ந.நி)

நிபுணர்மீது கொலைகுற்றச்சாட்டு

இறக்குமுன்னரே இருதயத்தை எடுத்துவிட்டாராம்!

ஜப்பானிய இருதய மாற்று நிபுணர் ஜூரேஷிடா என்பவர்மீது கொலை குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

மனித உயிரைக் காப்பாற்றுவதில் ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணிய இருதயமாற்று அதேசமயத்தில் சில சிக்கலான பிரச்னைகளையும் எழுப்பி விட்டிருக்கிறது.

யாரோ குச்சி என்ற 21 வயது வாலிபன் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி இறந்து விட்டான். அதாவது இறந்துவிட்டதாகக் கருதப்பட்டான். உடனே நிபுணர் ஜூரேஷிடா அவனுடைய இருதயத்தை எடுத்து இருதய பலவீனத்தால் இறந்த இன்னொருவருடைய தேகத்தில் பொருத்தி அவருக்கு மீண்டும் உயிரூட்டினார். யாமா குச்சி இறப்பதற்கு முன்பே அவனுடைய இருதயத்தை எடுத்து விட்டார். ஆகையால் அவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். என்று டாக்டர்மீது கொலைக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது.

சுமார் ஒருவருடத்துக்கு முன்பு தென் ஆபிரிக்க டாக்டர் பேர்னட் சரித்திரத்திலேயே முதன் முறையாக இருதய மாற்றம் செய்ததிலிருந்தே பல பிரச்னைகள் தோன்றின. டாக்டர் பேர்னட் செய்தது தவறு என்று அப்பொழுதே ரஷ்ய நிபுணர்கள் ஆட்சேபித்தார்கள். வேறு பல இடங்களிலும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

ஒருமனிதன் நிஜமாகவே இறந்து விடுவது எப்போது? இதுதான் மிக முக்கியமான பிரச்னை.

சாதாரண மரணங்களில் அநேகமாக இருதயத் துடிப்பு முற்றுக நின்றுபோய் விடும். அப்பொழுது பிரச்னை எதுவுமில்லை. இருதயம் நின்றபின்பு எது செய்தாலும் ஒருவரைப் பிழைக்கவைக்க முடியாது.

கொலை, தற்கொலை, திடீர் விபத்து முதலியவற்றால் இறப்பவர்களுக்கு இருதயத் துடிப்பு உடனே நின்றுவிடாது. மூளை உட்பட மற்ற அவயவங்கள் அனைத்தும் தொழிற்படுவதை நிறுத்திவிட்ட போதிலும் இருதயம் சற்று நேரத்திற்கு துடித்துக் கொண்டேயிருக்கும். அந்த இருதயத்தை எடுத்து இருதயம் நின்ற தால் மரணமடைந்த ஒருவரின் தேகத்தில் (பழுதடைந்த இதயத்துக்கு பதிலாக) பொருத்திவிட்டால் அவர் மீண்டும் பிழைத்துக்கொள்வார். இதுதான் இருதய மாற்று சிகிச்சை.

ஒரு மனிதனுடைய மூளை தொழிற்படுவதை நிறுத்தி விட்டபோதிலும் அவனுடைய இருதயம் துடித்துக் கொண்டே இருந்தால் அவன் இறந்துவிட்டான் என்றுதீர்மானிக்கமுடியுமா? அப்படி தீர்மானிப்பது யார்? அவனுடைய சொந்த டாக்டரா அல்லது இருதய மாற்றுசெய்யும் டக்டரா? இனி, ஒருவனுடைய இருதயத்தை எடுப்பதற்கு முன்பு அவனை உயிரோடு வைத்திருப்பதற்கு இயக்கக் கூடிய எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டனவா? இதை யார் தீர்மானித்தது?

இப்படி பல விதமான கேள்விகள் எழுகின்றன. சட்டம் சம்பந்தமான இக் கேள்விகளுக்கு இன்னும் சரியான விடைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இருதயம் துடித்தபோதிலும் மூளைவேலை நின்றுவிட்டால் ஒருவன் இறந்துவிட்டதாக தீர்மானிக்கலாம் என்று சிலரும், அப்படியன்று, இருதய துடிப்பு இருக்கும் வரைஒருவன் சாகமுடியாது என்று வேறுசிலரும் கருதுகிறார்கள்.

கொலை செய்யப்பட்ட ஒருவரின் இருதயம் எடுத்து வேறொருவருக்கு பொருத்தப்பட்ட தென்று வைப்போம். இருதயம் துடித்துக் கொண்டிருக்கும் போதே அது அகற்றப்பட்டதால் இறந்தவரை கொன்றது நானல்ல, டாக்டரே என்று கொலைக்குற்றம்சுமத்தப்பட்டவன் வாதாடலாமல்லவா? அவன் இன்னுமொரு படி மேலேயும் போகலாம். கொலை செய்யப்பட்டவரின் இருதயம் இன்னொருவருடைய உடம்பில் துடித்துக் கொண்டே இருக்கிறபடியால் அவன் இறக்கவில்லை, இன்னும் உயிருடன்தான் வாழ்கிறான் என்றும் வாதாடலாம்.

சட்டநிபுணர்களும் வைத்திய நிபுணர்களும் ஒன்று கூடி ஓர் ஒற்றுமையான முடிவுக்கு வரும்வரையில் இப் பிரச்னைகள் இருந்தே தீரும்.

ஜப்பானிய டாக்டர் மீதான கொலைவழக்கு எப்படி முடியும் என்பதை பலர் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். அது எப்படிப் போனாலும் ஒருவன் எப்பொழுது உண்மையாக சாகிறான் என்ற விஷயத்தில் நாட்டுக்கு நாடு வித்தியாசமான அபிப்பிராயங்களும் உண்டாகலாமல்லவா?

— வழிப்போக்கன்

தேசிய அரசாங்கத்தில் ஏன் இந்தப்பாகுபாடு?'

மருத்துவமாதர் சங்கதலைவி கேள்

யாழ்ப்பாணம், புதன் ''தமிழ் மருத்துவ தாதிகள் பயிற்சிமுடிந்து ஏழு வருடங்கள் வெளியில் வேலை செய்தபின்னரே, ஆஸ்பத்திரியில் கடமையாற்றுகிறார்கள். ஆனால் சிங்கள மருத்துவதாதிகள் பயிற்சி முடிந்து நேரடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறார்கள். 7 வருடம் வெளியில் வேலை செய்தபின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய தமிழ் மருத்துவதாதிகள், மீண்டும் வெளிவேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். அதே இடங்களுக்கு 7 வருடம் வெளிவேலை செய்யாத சிங்கள மருத்துவ தாதிகள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். தேசிய அரசாங்கம் இந்தப் பாகுபாடு காட்டுவது சரியா?''

யாழ்ப்பாணத்தில் நடந்த மருத்துவமாதர் மகாநாட்டிற்கு தலைமை தாங்கிய செல்வி லூசிதோமஸ் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள மருத்துவ தாதிகள் மீண்டும் வெளி இடங்களுக்கு அனுப்பப்பட்டு, அதே இடங்களுக்கு சிங்கள மருத்துவ தாதிகள் நியமிக்கப்படுவதால், இங்குள்ள நோயாளிகள், மொழியைப்புரிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுகின்றனர். தமிழ் நோயாளி கூறுவது எப்படி இங்குள்ள மருத்துவதாதிக்கு விளங்கும் இதனால் பிரச்னைகள் இன்னும் கூடுகிறது, இனிமேல், தமிழ் மருத்துவ தாதிகளை இங்கிருந்து அனுப்பக் கூடாது. இங்குள்ள 24 தமிழ் மருத்துவ மாதர்களில் 16 பேர்கள் வெளிவேலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் வெளியிடங்களில் காலி இடங்கள் இருந்தால் அதை நிரப்புவதற்கு மேலதிகமாக தமிழ் மருத்துவ தாதிகளை எடுக்கவேண்டும் ஆனால் இதைச்செய்ய அரசாங்கம் தயங்குகிறது.

தமிழ் மருத்துவதாதிகள் 24 மணித்தியாலங்கள் ஆஸ்பத்திரியிலும் வெளியிலும் வேலை செய்கின்றார்கள். இதே நேரத்தில் சிங்கள தேர்ச்சி இருந்தால்தான் அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. இவர்களுக்கு சிங்களம் படிக்க நேரமேது? சிங்களம் படிக்க வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை ஆனால் சிங்கள மருத்துவ மாதர்களுக்கு தமிழ் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தமிழ் பகுதிகளில் கடமையாற்றவரும் அவர்களுக்கல்லவா தமிழ் தெரிந்திருக்கவேண்டும். சிங்கள பகுதிகளில் கடமையாற்றுதை எங்களை, சிங்களம் படிக்கும் படி கேட்பது நியாயமானதா?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள தமிழ் மருத்துவதாதிகளுக்கு ஓய்வு நேரத்தில்தங்குவதற்கு ஒரு அறை இல்லை. ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குச் சென்ற ஒரு சிங்கள மருத்துவதாதிக்கு தனி அறை ஒன்று ஆஸ்பத்திரியில் வழங்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்பட்ட ஒரே ஒரு தமிழ் மேற்பார்வை மருத்துவ தாதி கடந்த 3 வருட காலமாக நிரந்தரமாக்கப்படவில்லை. ஆனால் சிங்களப் பகுதிகளில் சிங்கள மேற்பார்வை மருத்துவ தாதிகள் நியமிக்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றனர்.

மருத்துவ தாதிகள் சிங்களத்தில் 'மருத்துவ மாதர்' என அழைக்கப்படுகின்றனர். ஆனால் தமிழில் 'மருத்துவச்சி' என அழைக்கப்படுகின்றனர்.

தமிழ் மருத்துவத் தாதி சிங்களத்தில் தேர்ச்சி பெற்றாலும் சம்பள உயர்வு கிடைக்க தாமதமேற்படுகிறது. இங்குள்ள ஒரு மருத்துவ மாது கடந்த 3 வருடங்களுக்குமுன் சிங்கள பரீட்சையில் சித்தியடைந்திருந்தார். இன்னும் சம்பள உயர்வு கிடைக்கவில்லை. இவ்வருடம் மே மாதம் 1-ந் திகதி தான் சம்பள உயர்வு பற்றி பரிசீலனை செய்யப்படும் என அத்தாதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய அரசாங்கத்திலேயே தமிழருக்கு இந்தக் கதியென்றால் இனி வரும் அரசாங்கத்திடமிருந்து உரிமை கிடைக்கும் என எப்படி எதிர்பார்க்கலாம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 26-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

தால் இலங்கை அரசியல் பெரிதும் புனிதமடைந்து சமூகக் குறைகள் பலவும் நீங்கக்கூடும்.

தமிழ்ப் பகுதிகளிலே இவ்வகையில் நிலைமை மிக மோசமாகும். அவர் வகுப்புவாத அரசியலிலிருந்து விட்டு தமிழ்ப் பெண்கள் உள்ளிட்டு, நாட்டின் ஏன் உலகின் பெண்குலத்துக்கே அவர் தலைமை வகிக்க முன்வந்தால் எவ்வளவு பெருமையாக இருக்கும். ஆனால்...

0 0 0

பிரதமர் டட்லியை தங்கள் நாட்டுக்கு வருமாறு ரஷ்யா அழைத்துள்ளதை அவர் ஒப்புக் கொள்ள சம்மதித்திருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

அவர் ரஷ்யாவுக்கு மட்டுமல்ல, புதுசீனம் உள்ளிட்டு எல்லா நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்வதால் பலவிதங்களிலும் நல்லதாகும். சிறப்பாக பக்கத்திலுள்ள தமிழ்நாட்டுக்கும் அவர் எதிர்க்கட்சித் தலைவர் களையும் அழைத்துக் கொண்டு செல்லுவதாயின் வீண் தப்பெண்ணங்கள் நீங்கி, நல்லுறவும், ஒத்துழைப்பும் பெருகி, சமாதானம் பலப்படும்.

சிறிய நாடான இலங்கைக்கு உலகில் நல்ல வேளையாக விரோதிகள் கிடையா. ஆசியாவின் ஸ்விட்சர்லந்தாக, இந்தக் கண்டத்தின் அமைதியைப் பாதுகாக்கக் கூடிய தகுதியுள்ளதாக நம் இலங்கை பொலிகின்றது. ஆகவே அவர் யார் அழைத்தாலும் அந்த நாட்டுக்குச் செல்லுவது நல்லதே யாகும்.

மே அல்லது ஜூன்மாதத்தில் வர வசதிப்படுமென பிரதமர் டட்லி தெரிவித்துள்ளதாயும், ஆனால் மார்ச் அல்லது ஏப்ரலில் வருவது நல்லதென்று ரஷ்யா கூறியுள்ளதாகவும் தெரிகிறது. பொதுத் தேர்தல் எந்தச் சமயமும் நடக்கலாமென்பதால்தான் பிரதமர் தமது பயணத்தை தாமதிக்கின்றாரா? அடுத்த மாதமே பொதுத் தேர்தல் நடக்குமா? என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

0 0 0

பாதி ஓர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடை கங்கை வைத்தாய், மாதர் நல்லார் வடுத்தம் மதுநீயும் அறிதியன்றே, கோதில் பொழில் படைசூழ் குண்டையூர்ச் சிவ நெல்லுப்பெற்றேன், ஆதியே அற்புதனே அவை அட்டித்தரப்பணியே.

— ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org